# குறிஞ்சித்தேன்

## லிங்கதாசன் கவிதைகள்



கவிஞர் க.ப.லிங்கதாசன்

லிங்கன்
பதிப்பகம்

[illegible]
[illegible]

# குறிஞ்சித் தேன்

## லிங்கதாசன் கவிதைகள்

முதலாம் பகுதி

**கவிஞர் லிங்கதாசன்**

லிங்கன் பதிப்பகம்
இல.167/25, டிம்புல வீதி.
அட்டன்.

| | | |
|---|---|---|
| முதலாம் பதிப்பு | : | ஏப்ரல் 2000 |
| உரிமை | : | பதிப்பாசிரியர்க்கு |
| நூற் பெயர் | : | " குறிஞ்சித் தேன் " (முதலாம் பகுதி) |
| பொருள் | : | கவிதைத் தொகுப்பு |
| நூலாசிரியர் | : | கவிஞர் க.ப. லிங்கதாசன் |
| பதிப்பாசிரியர் | : | ப. கிருபாகரன் |
| பதிப்பகம் | : | லிங்கன் பதிப்பகம் |
| வெளியீடு | : | லிங்கன் பதிப்பகம்<br>இல.167/25, டிம்புலவீதி,<br>அட்டன். |
| அச்சிட்டவர் | : | ரமேஷ் பிரிண்டர்ஸ், திருச்சி |
| அட்டைப்படம் | : | நந்தகுமார், அட்டன் |
| விற்பனை உரிமை | : | சென்றல் டிரேடிங்<br>இல.34 A, சைட் வீதி,<br>அட்டன். |
| ரூபா. | : | 115/= |

# முன்னுரை

## "நான் ஏன் எழுதுகிறேன்?"

ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்த சம்பவம் ஒன்று இப்போது என் நினைவுத்திரையில் ஓடுகின்றது. அந்தக் கவியரங்கத்தின் மேடையில் ஒலிபெருக்கிக்கு முன்னால் நின்று என் கவிதையைப் பாடிமுடித்து அமர்ந்தேன்.

கவியரங்கத்திற்குத் தலைமை வகித்த கவிஞர், என் கவிதைக்குப் புகழாரம் சூட்டியதோடு நில்லாமல், 'இரும்புக் கடைவைத்து இல்வாழ்வு நடத்தும் இவர், கரும்புக் கவிபடைக்கும் காரணமோ புரியவில்லை' என்று இறுதியாகக் கூறிவிட்டு அடுத்த கவிஞரை மேடைக்கு அழைத்தார், எனவே என் பதிலை அவர் எதிர்பார்க்கவில்லை. நான் என் பதிலைக் கூறுவதற்கு நேரமும் ஒதுக்கப்படவில்லை! ஆனால். . .

விழிப்பிசைக் குறியோடு நின்றுவிட்ட அக்கவிதை வரிகள் இரண்டும் என்னுள் வியாபித்து வினாக்குறியாக விஸ்வரூபம் எடுத்திருந்தது. அந்த வினாவுக்குத் தகுந்த விடையளிக்க வேண்டியது எனது பொறுப்பாகும் என எண்ணித் தருணத்தை எதிர்பார்த்திருந்தேன். அந்த நல்ல தருணமும் எனக்குக் கிட்டியது. "நான் ஏன் எழுதுகிறேன்" என்ற தலைப்பில் எனது கட்டுரையை 20.09.1987ல் வீரகேசரி இதழ் பிரசுரித்தது. அந்தக் கட்டுரையே இக்கவிதை நூலுக்கு முன்னுரையாக இருப்பது பொருத்தமாகும் எனக்கருதுகிறேன். இதோ!

அக்கட்டுரை என் உள்ளக்கிடக்கையை இவ்வாறு தெளிவுப் படுத்துகிறது. திண்ணைப் பள்ளியில் அமர்ந்து தேன் தமிழ் அன்னை மொழியின் அகர வரிசைகளை உரக்க ஒலிக்கச் செய்து, மணலின் மேல் என் பிஞ்சுக் கரத்தின் சுட்டுவிரல் தேய்ந்து சிவக்கும்வரையும், வரிவடிவங்களைக் கோணல்மானலாகக் கிறுக்கி எழுதியும், விளையாடியும், ஆடிப்பாடிக் கூடிக் குழாவியும், கும்மாளமிட்டும், குருவின் கைப் பிரம்புக்குக் கொஞ்சமும் அஞ்சாமல் கிடைக்கும் தண்டனைக் கேற்ற கூக்குரல் எழுப்பியும், அந்தத் தோட்டத்து மண்ணின் மடியில் புரண்டு தவழும் பாலர்கள் பலருள் நானும் ஒருவனாய் இருந்தபோது, மலையக இலக்கிய விளை நிலத்தில் நன்கு விளையும் பயிரொன்றை முளையிலேயே அறிந்து கொண்ட எனது இராப்பாடசாலை ஆசானின் ஆசைக்கு இரையாகி, நகர்ப்புறத்துப் பள்ளிக்குப் பலவந்தமாக என் தந்தையாரால் நகர்த்தப்பட்டதன் காரணம் அப்போது எனக்குப் புரியவில்லை. சிறைப்பட்ட அடிமை வாழ்வுக்கும், விடுபட்ட சுதந்திர வாழ்வுக்கும் இடைப்பட்டு நின்று ஏங்கிய ஏக்கப் பெருமூச்சின் கனல் உணர்ச்சிப் பிழம்பாய் உருவெடுத்து உள்ளத்தினின்றும் ஊற்றெடுத்த படைப்புக் களால் என் அப்பியாசப் புத்தகங்களின் பின்பக்க ஏடுகள் ஏராளமானவை இரையாகின. இருண்ட வாழ்வுக்கு ஒளி கொடுக்கும் புத்துணர்வுக்கும் புதுத்தெம்புக்கும் உறுதுணையாய் "தேசத் தொண்டன்" போன்ற

சிறுவர் இதழ்கள் எழுத்துக்கு உரமூட்டின. நான் பிறந்து வளரும் சமூகத்தின் பல கோணங்களிலும் என் ஆழமான பார்வை பதிந்தது. அந்த ஆழமானப் பார்வையில்...

எள்ளிநகைக்கும் ஏளனத்துக் குரியவர் களாய்த் தரணியிலே தள்ளிவைத்து ஒதுக்கிய வேதனையில் நைந்தவர்களாகவும், கிணற்றுத் தவளைக்கு ஒப்பான அந்த அப்பாவி மக்களின் உழைப்பை, ஊதியத்தை, உதிரத்தை ஏன்? உயிரைக் கூடத்தான் உறிஞ்சிக் குடிக்கும் அட்டைகளிடமிருந்து தப்பிப் பிழைக்க முடியாதவர் களாகவும், பரிதாபத்துக்குறிய இச்சமூகத்தின் முதுகை ஏணிப்படியாக்கிக் கொண்டவர்கள் ஏறியபின் எட்டி உதைத்ததால் ஏற்பட்டதுயரத்தி லிருந்து மீளமுடியா தவர்களாகவும், அடக்கியொடு க்கப்பட்டுச் சிறகொடிந்த சிறைப் பறவையாகியதால் சுதந்திர வாழ்வுக்கு ஏங்கியவர்களாகவும், உரிமைகள் பலவும் இழந்த சோகத்தின் வடுக்கள் நிறைந்தவர்களாகவும் இருப்பது புரிந்தது. மேய்ப்பாளர்களின் கட்டளைகளால் மிதிபட்ட தழும்புகள் மாறாமல், சொந்த புத்தி மழுங்கிப் போன மந்தை வாழ்வினின்றும் விடுபடுவதற்காகவும், அடிமை வாழ்வின் குட்டையிலே ஊறிப்போய் துர்நாற்றம் வீசும் இந்த மட்டைகளின் மக்களின் அவல வாழ்வின் மீட்சிக்காகவும், வாழ்வோடு பின்னிப் பிணைந்து, இரத்தத்தோடு இரத்தமாய்க் கலந்துவிட்ட மூடநம்பிக்கைகள், சாதி, சமயப்

பூசல்கள், சங்கச்சண்டைகள், போட்டி பொறாமைகள் போன்ற அறியாமையினின்றும் விடுபட்டு ஒளி வாழ்வைப் பெறுவதற்காகவும், அறிவொளி பெற்ற ஏனைய மக்களைப் போன்று மதிக்கத்தக்க மனிதர்களாக வாழ்வு மலரவும் புத்தெழுச்சி பெறவும், வீறுநடைபோட்டு முன்னேறிச் செல்லவும் வழிதான் என்ன? என்று என் மனம் சிந்திக்கத் தொடங்கியது.

என் சிந்தனைப்பறவை சிறகடித்துப் பறக்கும்போது இதய வெளியிலே உதயமாகும் ஒப்பற்ற கருக்கூடல்கள் ஒன்று திரண்டு ஆக்கங்களாய் மழையெனப் பொழிகின்றன.

என் விளைநிலத்தின் உழவர்களாய்த் திகழும் என் சமூகத்தின் புதிய வாழ்வுக்காக அவர்களின் வாழ்வுப்போராட்டங்கள், பொருளாதாரச் சிக்கல்கள், கல்வியறிவு, இலக்கியம், கலை, கலாச்சாரப் பண்பாடுகளின் வளர்ச்சி என்பவற்றுக்காக எழுதினேன். எழுதிக்கொண்டே இருக்கிறேன்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகள் அனைத்தும் 1956ம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு இதழ்களிலும் பிரசுரமானவை. அவ்வப்போது மகிழ்வுடன் ஏற்றுப் பிரசுரித்து ஊக்கப்படுத்திய தேசத்தொண்டன், வீரகேசரி, தினகரன், தினபதி, சிந்தாமணி, ராதா, ஈழமணி, ஈழநாடு, மலைச்சாரல், மலைமகள், மாலைமுரசு, உதயம், நவஉதயம், கொந்தளிப்பு, பூபாளம், குன்றின்குரல், கொழுந்து, இதயம், சைவச்சுடர், இந்து இளைஞன் போன்ற தினசரி, வார, மாத, காலாண்டு, இதழ்களுக்கும்,

அவ்வப்போது வெளிவந்த ஆண்டுமலர்களுக்கும், நாட்டிய, நாடகக் கலை நிகழ்ச்சிகளுக்கும், இலங்கை வானொலிக்கும் எனது உளம் கனிந்த நன்றிகள்.

காலத்தின் தேவையறிந்து இக்கவிதை நூலை வெளியிட விரும்பிய என் அன்புக்குறிய புதல்வரும், லிங்கன் பதிப்பக உரிமையாளருமான செல்வன் கிருபாகரனுக்கும் நூற்தொகுப்பை ஆக்கித்தந்த அன்பு மருமகன் செல்வன் ரட்ணம் சிவானந்தனுக்கும், எனது இக்கவிதை நூல் மிகச் சிறந்த முறையில் வெகு விரைவாக வெளியிட வேண்டும் எனச் சிரமம் பாராமல் உழைத்து அச்சிட்டு உதவிய **ரமேஷ் பிரிண்டர்ஸ்** அச்சகத்தாருக்கும் என் நன்றிகள் உறித்தாகும். "குறிஞ்சித்தேன்" கவிதை நூலினை வாசகப் பெருமக்கள் மகிழ்வுடன் வரவேற்பதோடு, தமது கருத்துக்களையும் வழங்கி இது போன்ற மேலும் பல நூல்கள் வெளிவருவதற்கு ஊக்க மளிப்பார்கள் என்று நம்புகிறேன்

வணக்கம்

அன்புடன்

**க.ப. லிங்கதாசன்**

**" கமலவாசா "**
இல. 167/25, டிம்புல வீதி,
அட்டன்

# பதிப்புரை

கவிஞர்களை எவரும் உருவாக்குவதில்லை. கவிஞர்கள் பிறக்கிறார்கள் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். கவிக்குயில் லிங்கதாசன் அவர்கள் தமக்கு விபரம் புரிந்த காலம் தொட்டே கவிதைகள் படைக்கும் வல்லமை பெற்றவராவார் என்பதை அவரின் வாழ்க்கை அனுபவங்களை கேட்டறியும் போது எவரும் தெரிந்து கொள்ள முடியும்.

மலையக மண்ணில் தோன்றிய கவிஞர் அவர்கள்,அந்த மண்ணின் மக்களின் எழுச்சிக்காகவும், விடிவுக்காகவும், உரிமைக்காகவும் இன்றுவரையும் அயராது எழுதிவருபவர். தான் தீராத நோயுற்றிருந்த போதும் கூட தனது எழுத்துப் பணியை அவர் நிறுத்தவில்லை.

''பாடையில் என்னுடல் போகும்வரை - கவி
பாடுதல் எனக்கே வேலையம்மா!
ஓடைகள் சலசலத்து ஓடும்வரை - மலையில்
ஓயாதென் பாடலும் ஒலிக்குமம்மா!''

என்று தனது ஆழ்மனக் கருத்தைத் தன் கவிதை மூலம் நமக்குத் தெளிவுபடுத்தியுள்ளார் கவிஞர். இவரின் எண்ணம் நிறைவேறும் வகையில் லிங்கன் பதிப்பகத்தினூடாகக் ''குறிஞ்சித்தேன்'' எனும் இக்கவிதை நூலினை வெளியிடும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருப்பதைப் பெறும் பேராகக் கருதுகிறேன். காலத்தின் தேவையறிந்து வெளிவரும் இந்நூல் தமிழ் இலக்கிய உலகத்தின் செழுமைக்கு வளம் சேர்க்கும் என நம்புகிறேன்.

லிங்கன் பதிப்பகத்தின் பணிகள் மேலும் வளர்ச்சி பெற உங்கள் அனைவரின் அன்பையும் ஆதரவையும் வழங்குவீர்கள் என நம்புகிறேன்.

அன்புடன்
பதிப்பாசிரியர்

# உள்ளுறை

1.மலை நாடே!.................................... 15
2.வெற்றி முழக்கம் .............................. 16
3.இல்லை ! என்ற சொல் ...................... 17
4.புதுயுகம் படைப்போம் ...................... 18
5.புறப்படு மலைத்தமிழா!......................... 20
6.கொந்தளிப்பு !...................................... 21
7.துடித்தெழும் காலம்............................ 22
8.பிரிவுத் துயர்........................................ 23
9.பண்பை விற்கும் பாவை ...................... 24
10.குறிஞ்சிக் குறல்................................. 25
11.அன்புத் துணைவிக்கு!......................... 26
12.புதிய கனவு....................................... 28
13.குறிஞ்சி மண்ணிலே........................... 32
14.மங்களப் பொங்கலோ பொங்குதடி! ....... 35
15.மலைத்தாயின் புலம்பல் !..................... 36
16.உரிமை முழக்கம்.............................. 40
17.வீரத்தோழர் தம் விந்தைகள் !................ 41
18.தோட்டப் புறத்துநற் தோழியரே !........... 44
19.கொடுமையடா குன்றில் !..................... 46
20.புறப்படு! புறப்படடா !......................... 48

| | |
|---|---|
| 21.தோட்டத் தொழிற்துறைப் பெண்ணாள் ! .. | 49 |
| 22.ஊருக்கே யூட்டும் ஒளியினைப்பார் !. ...... | 52 |
| 23.வாழப்புது வழி ........................ | 53 |
| 24.பிஞ்சு உலகமே கேள் ! ...................... | 55 |
| 25.போசன் திருநாள் ............................ | 56 |
| 26.பகுத்தறிவுப் படைத்திரள்க ! ................ | 57 |
| 27.செய்யும் தொழிலே தெய்வம் ! ............ | 59 |
| 28.காணி நிலம் வேண்டும்! ...................... | 62 |
| 29.போலிகள் கவனம்! ...................... | 64 |
| 30.விரைந்தெழு நங்காய்! ...................... | 65 |
| 31. கவிமழை பொழியும் நாடு! ................ | 66 |
| 32.போர்ராட்டம் ! ...................... | 67 |
| 33.காதலூட்டுங் காளை ...................... | 68 |
| 34.புறப்படடா! புத்துலகைக் காண்பதற்கே! .. | 69 |
| 35.சித்தந் தெளிந்திடில் ...................... | 72 |
| 36.உறக்கம் தெளிவது எப்போது? ........... | 74 |
| 37.மாவலித் தாயே சொல் ! ...................... | 75 |
| 38.திரு வாழ்வைத் தா! ...................... | 76 |
| 39.உணர்வாரில்லை! ...................... | 77 |
| 40.காலம் வராதோ கும்மியடி! ................ | 79 |

41.தமிழ்க்கொடி நாட்டுவோம்! ............... 80

42.உபாயமே சொல்லுமம்மா! ................ 81

43.அழகே தமிழ்! .................... 82

44.சினந்து கொள்வதேன்? .................... 83

45.இசை .................... 84

46.விழித்தெழுவாய் .................... 85

47.பழமையும் புதுமையும் .................... 86

48.தளிர்கள் .................... 87

49.உயர்ந்த வாழ்வைத் தேடு!.................... 88

50.கோழைத்தனம் ஏனடா? .................... 89

51.சந்தேகம்! .................... 90

52.ஏக்கம்! .................... 91

53.பாலின் பயன்! .................... 92

54.மட்டம் சரியாப் போடு மாரியாயி! ....... 93

55.சங்கே முழங்கு! .................... 94

56.புகார் .................... 95

57.யாருக்குச் சொந்தம் ? .................... 96

58.பாகுபாடு ஏன்? .................... 97

59.பொங்கலுக்கு வாங்க மச்சான் ............ 98

60.பாடையிலே என்னுடல் போகும்வரை .. 100

# சமர்ப்பணம்

கருவினில் சிதையா வண்ணம்
காத்துயிர் உதரத் துள்ளே
உருவினை வளர வைத்து,
உதிரத்தை யுணவா யூட்டிப்
பருவநாள் வரையும் தன்னைப்
பணயமாய் ஈந்து பெற்று,
ஒருநொடி யேனும் பிரியா
உளமது, அன்பால், நோயும்
நெருங்கிடா வண்ணம் காவல்
நிதான மாயிருந்து, உடலத்
திருவிளை யாடல் கண்டும்,
தேன்தமிழ் மழலை யுண்டும்,
பருவத்தே பள்ளிக் கனுப்பிப்
பகுத்தறி வூட்டிக் குறிஞ்சித்
திருமகள் மகிழச் செய்த
தெய்வமாம் அன்னைக் கேயாம்!

*கவிஞர் லிங்கதாசன்*

# மலை நாடே!

வெற்றி முழக்கம் விண்ணைத் தொட்டிட
வீரங் கொண்டெழு மலைநாடே!
வீரங் கொண்டெழு மலைநாடே! - வியர்வை

நெற்றியில் வழிய நித்தம் உழைக்கும்
நம் மக்களை வாழவை மலைநாடே!
நம் மக்களை வாழவை மலைநாடே! - துன்பம்

பற்றிப் படரும் பாதை யொழிக்கப்
பாங்காய் எழுந்திரு மலைநாடே!
பாங்காய் எழுந்திரு மலைநாடே! - கலைகள்

முற்றிப் பெருகிட முத்தமிழ் வாழ்ந்திட
முந்தி யெழுந்திரு மலைநாடே!
முந்தி யெழுந்திரு மலைநாடே! - கல்வி

கற்றிருப்போரே காடு மலையெலாம்
காண விழைகிறேன் மலைநாடே!
காண விழைகிறேன் மலைநாடே! - மலையைச்

சுற்றி வளைத்துப் பள்ளிகள் பெருக்கிடச்
சுதந்திர உரிமைதா மலைநாடே!
சுதந்திர உரிமைதா மலைநாடே! - வயிறு

பற்றியெரியப் பதைத்துத் துடிக்கும்
பாவத்தை யறுப்பாய் மலைநாடே!
பாவத்தை யறுப்பாய் மலைநாடே! - எம்மைச்

சுற்றியே வாழும் மக்களும் வாழச்
சுகம் பெறச் செய்வாய் மலைநாடே!
சுகம் பெறச்செய்வாய் மலைநாடே!

வீரகேசரி 20-06-1968

# வெற்றி முழக்கம்

வெற்றி! வெற்றி ! வெற்றியென்று
வீதி தோறும் முழங்குவோம் ! - மலையில்
வெற்றிக் கொடி நாட்டும் விந்தை
விண் ணதிரச் செய்குவோம்!

பட்ட பாடு போதும் இனிப்
பகுத் தறிவை யூட்டுவோம் ! - மலையில்
துட்டர் வந்து துன்பம் செய்தால்
துரத்தி யோட்ட முந்துவோம்!

பட்டப் படிப்பு நமக்கு வேண்டும்
பசுந் தமிழைப் போற்றுவோம்! - நல்ல
திட்டந் தீட்டி நாட்டைக் காக்குந்
திறத்தை யிங்கு காட்டுவோம்!

மட்ட ரகப் பெருமை பேசும்
மடமையை நாம் கொளுத்துவோம் ! -
நமைத்தொட்ட துன்பம் போய கலத்
துள்ளி யோடி யாடுவோம்!

கெட்டதை யாம் சொல்லிப் பேசும்
கீழ்மை யையக ற்றுவோம்! - குறைகளை
விட்டு வைப்ப தில்லை யென்று
விரைந்து நிறைவு செய்குவோம்!

ஒட்டிக் கொள்ளும் புல் லுருவிக்
கூட்டத் தையாம் ஓட்டுவோம்! - மார்
தட்டி நின்று போலிகளைத்
தவிடு பொடி யாக்குவோம்.

''பரிசு எனும் நாடகத்தில்'' 16-1-1960

# இல்லை! என்ற சொல்

இல்லை! இல்லை! என்ற சொல்லை
இதயத்தில் நீ யோட்டடா! - மனத்
தொல்லை இல்லை! என்ற சொல்லால்
துயரத்தை நீ போக்கடா!

அச்சம் இல்லை ! என்ற சொல்லை
அனைவர்க்கும் நீ சொல்லடா! - துயரைத்
துச்ச மாக மதித்து நீயும்
தூய வாழ்வைக் கொள்ளடா!

மிச்சம் இல்லை! என்ற சொல்லை
மீண்டும் வராமல் நீ யோட்டடா! - இனிக்
கச்சி தமாய்க் கவனம் வைத்துக்
காக்கும் பொருளைத் தேடடா!

உரிமை இல்லை! என்ற சொல்லை
உதறி யெறிந்துநீ தள்ளடா! - மலை
உரிமை முழக்கம் எங்கு மொலிக்க
ஊரறிய நீ செய்யடா!

கற்க வழியே இல்லை! என்ற
கவலையை நீ யொழியடா! - கல்வி
கற்க வேபல கலா சாலைகள்
கட்டி முடிக்க நீ முந்தடா!

வேலை இல்லை! என்ற சொல்லை
விரட்டி யடிக்கநீ முந்தடா! - நம்
மலை நாட்டி லெங்கும் இழிவு நீக்கி
நாடி யெதையும் நீ செய்யடா!

அடிமைப் பிணியை அடியோடகற்ற
அஞ்சாதே நீ முந்தடா! - வீரத்
தடியை ஏந்தி விடுதலை பெற்றிடத்
தயங்கா தேநீ முந்தடா!

**இதயகீதம்** 07-03-1960

# புது யுகம் படைப்போம்

ஈழவள நாட்டிலெங்கும் புகுவோம்! - எம(து)
இன்பத் தமிழ்மொழியை வாழ்ந்திட வைப்போம்!
வாழப்புது மையுகம் காண விழைவோம்! - நல்ல
வாரிசு மலையகத்தில் வாழ்ந்திட வைப்போம்!

மீளா அடிமைத்துயர் மீளமுனைவோம்! - எங்கள்
மின்னல் மலைநாட்டைப் பொன்னாக்குவோம்!
வேளாண்மை செய்திடவே நாம் முந்துவோம் ! - தீமை
வேண்டாம் நமக்கினி அதை யொழிப்போம்!

கள்ளம் கபடமெதும் நமக்கு வேண்டாம்! - தீய
கள்ளுக்குடி போதை நமக்கு வேண்டாம்!
குள்ள நரிக் கூட்டம் நமைக்கெடுக்கும்! - நாம்
கொல்ல அதனையும் முந்திச் செல்குவோம்!

போட்டி பொறாமையெதும் நமக்கு வேண்டாம்! - தீய
போதனைகள் எதுவுமினி நமக்கு வேண்டாம்!
மாட்டிக் கொண்டோர் நிலைமாறிட வைப்போம்! - நாம்
மானவுணர்ச்சியுடன் வாழ முந்துவோம்!

வஞ்சகம் சூதுமிவை வாட்டிவதைக்கும்! - எங்கள்
வாழ்வுக்கு அது வேண்டாம் தள்ளியே வைப்போம்!
துஞ்சும் நிலைவரினும் தொடர்ந்து செல்குவோம்! - நாம்
தூய உரிமைகளை நிலைநாட்டுவோம்!

வேசி பரத்தை நிலை வீணாக்குவோம்! - நல்ல
வேல்விழியர் கற்புநிலை காக்க முந்துவோம்!
பேசிப் பொழுதை ஏன்? வீணாக்குவான்! இனிப்
பேசும் நிலை தனித்துச் செயல்படுவோம்!

பாடும் இசைப்புலவர் கலைஞருண்டு! - அவர்க்குப்
பாடுமிசைப் புலமைக்குயிர் கொடுப்போம் !
ஏடும் நிறையத் தேன் கவிகளுண்டு! - எழுதும்
எழுத்தாளர் கூட்டத்தையும் வாழ்ந்திட வைப்போம்!

மங்கிக் கிடக்கும் நல்ல கலைகளுண்டு! - அவைக்கு
மதிப்பீந்து உயிர்வழித்து போற்றிவருவோம்!
எங்கும் மலையகத்தில் எடுத்தோதுவோம்! - நல்ல
இயலிசை நாடகத்திற் குயிர் கொடுப்போம்!

கைத்தொழில் நுண்கலைகள் நாமும் கற்போம்! - மலையைக்
காவல் அரண் செய்து காக்க முந்துவோம்!
பைத்தியப் பேய்களையே நாட்டில் ஒழிப்போம் - துன்பப்
பகைவரை ஒன்றாக்கிப் பண்பு கூறுவோம்!

கல்வி யறிவொளி பரப்பி வருவோம்! - அவை
கண்கள் எனப்போற்றிக் காத்து வருவோம்!
நல்வித் தைபலவும் கற்றிடுவோம்! - இந்த
நானிலத்தே யாவரையும் மகிழ்ந்திட வைப்போம்!

**பரிசு நாடகத்தில் சேர்ந்துக் கொள்ளப்பட்டது**

17-03-1961

# புறப்படு மலைத்தமிழா !

எங்கு மின்பத் தமிழோங்க
இன்றே தமிழன் வாழ்வுயரச்
சங்கம் வளர்த்த சான்றோரின்
சைவம் நன்றே தழைத்தோங்க
எங்கள் இளையோர் எழுச்சியுடன்
இன்பப் பணிசெய முன்னேறிப்
பொங்கி யெழுந்தே நீயுதவப்
புறப்படு இன்றே மலைத்தமிழா!

தூங்கிக் கிடந்த தமிழினத்தின்
துயரை இன்றே போக்கிவிட
ஏங்கித் தவித்தே யுரிமைக்காய்
இருந்து வாடும் நிலைபோக்க
ஓங்கும் உணர்ச்சிப் பெருக்காலே
உள்ளம் துடிக்கும் இளையோரைத்
தாங்கிப் பிடித்து நீயுதவத்
தவறாதே நீ மலைத்தமிழா!

மங்கும் மறத்தமிழ்க் கல்விநிலை
மறையும் நற்கலைப் பண்பெல்லாம்
ஏங்கும் ஏற்றம் பெற்றிடவே
இளையோர் செய்யும் பணிக்கென்றும்
திங்கள் வளரும் வளம் போலே
தினமும் நன்றே வளர்ந்தோங்க
எங்கள் உயிரும் தருவோமென்று
இன்றே புறப்படு மலைத்தமிழா!

**மலைச்சாரல்** 10-04-1960

# கொந்தளிப்பு!

செந்தளிர்க் கரங்கள் மேயச்
செழுந்தளிர் சேர்த்துச் செல்வம்
தத்தளித் தெங்கள் நாட்டின்
தன்னிக ரற்ற மேலோர்
சிந்தையில் எண்ணம் கோடி!
சிறப்பிலா வாழ்வில் வாடிக்
கொந்தளித் தேங்கும் நெஞ்சக்
குமுறல்கள் ஓய்வ தெப்போ?

செங்கதிர் ஒளிரும் முன்னே
செய்தொழிற் களம் புகுந்து
தம் கடன் பணியைச் செய்து
தன்னுடல் வருத்தி மேலாய்ப்
பொங்கிடும் செல்வம் தந்து
புவியினுக்கு உடலை ஈந்தோர்
கொந்தளித் தேங்கும் நெஞ்சக்
குமுறல்கள் ஓய்வ தெப்போ?

சிந்திய குருதி யாற்றுச்
செழிப்பினில் வளர்த்த செல்வம்
எந்தையர் நாடே இந்த
ஈழமும் சிறக்கச் செய்தோர்
சிந்தையோ நொந்து ஈனச்
சிறுமையில் வாடும் மக்கள்
கொந்தளித் தேங்கும் நெஞ்சக்
குமுறல்கள் ஓய்வ தெப்போ?

**சிந்தாமணி** 01-09-1982

# துடித்தெழும் காலம்

தூங்கிக் கிடந்த தொழிலாளி! - நீ
துடித்தெழும் காலம் வந்ததப்பா ! - என்றும்
ஏங்கித் தவித்த வாழ்வுக்கு - நல்ல
ஏற்றம் பிறந்திடப் போகுதப்பா!

அஞ்சி வாழ்ந்த காலமெலாம் - இனி
அடியோ டொழிந்தே போகுமப்பா! - உனை
வஞ்சித்து வாழ்ந்தோர் போயொழிய - உன்
வறுமைப் பிணியும் மடியுமப்பா!

உரிமைகள் யாவும் பெற்றிடலாம்! - நீ
ஊரில் நிமிர்ந்தே வாழுமப்பா ! - உன்
அறியாமை யாவும் அகன்றுவிட - எங்கும்
அறிவொளி வீசித் திகழ்வாயப்பா!

வீட்டுக்கு ஒன்றாய்க் கட்சிகளை - இனி
விட்டு வைக்காதே ஒழித்திடப்பா ! - நம்
நாட்டுக்கும் நாளைய மக்கட்கும் - சேவை
நாடொறும் தவறாமற் செய்யுமப்பா !

உழைக்கும் கரங்கள் உயர்ந்தாலே - நாடு
உண்மையாய் வளமுறுங் காணுமப்பா! - நன்கு
நிலைக்கும் நித்திய வாழ்வுக்கும் - உன்
நேர்மை யுழைப்பே தேவையப்பா!

**வீரகேசரி**
07-05-1964

# பிரிவுத் துயர்

தளிர் வாடத் தலைகுனியும் தேயிலையேநீ!
தரைநோக்கித் தனிமையிலே வாடுவதேனோ?
தளிர்க்கரத்தால் தடவிமுத்தம் தந்திடும் பெண்கள்
தாயகத்தை நோக்கி மெல்லப் போவதனாலே!

குறுகுறுத்த பார்வை நிகர் குறிஞ்சிப்பூ வே!
குவிந்தயிதழ் சாயநீயும் குமுறுவதேனோ?
அருகருகே வந்துநிதம் அழகுபார்க்கும்
அரிவையர்கள் என்னைவிட்டு அகல்வதனாலே!

வண்ணவொளி வீசியெந்தன் கண்ணைப் பறிக்கும்
வடிவழகு முத்துப்பனி வற்றித் தேய்வ தேனோ?
என்னிதயத் துள்ளிருக்கும் இளைஞர் கூட்டம்
ஏங்கிவிடும் மூச்சினனல் எரிப்பதனாலே!

அள்ளி மலர் வீசிவரும் வெள்ளிநதியே!
அவசரமாய் அலைமோதி ஓடுவதேனோ?
துள்ளிவிளை யாடியெந்தன் துயரங்களைந்த
தொகையருடன் துணையும் தூரச் செல்வதனாலே!

வெள்ளாடை யன்னமுகிற் கூட்டங்களே நீங்கள்
வேலொத்த குன்றுகளைத் தழுவவராத தேனோ?
வல்லவர்கள் வகையான நாட்டை மீட்டு யின்று
வருந்தி யழுதேபுலம்பிச் செல்வதனாலே!

கள்ளமிலா உள்ளம் நெகிழ் புள்ளினங்களே!
கவிபாடி மகிழ்ந்திருக்க இங்குவராத தேனோ?
நல்லவர்கள் நாட்டுக்கு உழைத்தவர்களின்று
நாடு விட்டு நாடுசெல்லும் துயரதனாலே!

உயர்ந்தமலை ஏறிச்செல்லும் உடரட்டமெனிக்கா - நீ
உறுமியவார் உன் போக்கில் ஓடிச் செல்வ தேனோ?
பெயர்ந்துமலைநாடுவிட்டுப் பிரிந்து செல்வோரைப்
பெருங்கணக்காய் ஏற்றிச் செல்லும் துயரதனாலே!

அலைவீசி யார்ப்பரிக்கும் ஆழிமீதிலே ஊரும்
அடுக்குமாடிக் கப்பலேநீ அமைதியுற்ற தேனோ?
மலைத்தாயின் அகம்பிரியும் மக்கள் முகம் கண்டே
மணங்கசிந்தும் மறுக்காமல் ஊர்வதனாலே!

**மலைகள்** 28-10-1969

# *பண்பை விற்கும் பாவை*

கற்பை விலைபேசிக் காற்றெடைக்கு மேலுபடுத்துஞ்
சொற் பஞ்சமில்லாச் சொகுசுடையாள் - நற்பண்பை
விற்புருவ வேல்விழியாள் வென்று கொழுநற்குப்
பற்பல தீங்காவாளே பார்!

**சுதந்திரன்**
1963

# குறிஞ்சிக் குரல்

குறிஞ்சிக் குரலெங்கும் ஒலிக்கட்டும்! - மனத்துக்
குறுகிய எண்ணங்கள் தொலையட்டும்! - குருதியை
உறிஞ்சிக் குடிப்போர்கள் அழியட்டும்! - உண்மை
உரையாத உளுத்தர்கள் ஒழியட்டும்!

நெறியில் நிலைப்பவர் உயரட்டும்! - தூய
நினைவில் இருப்பவர் வளரட்டும்! - நல்ல
குறியில் இருப்பவர் தழைக்கட்டும்! - அருங்
குணத்தவர் எங்கும் ஓங்கட்டும்!

பழைமை பேசுதல் மறையட்டும்! - நல்ல
பகுத்தறி வாளர்கள் பெருகட்டும்! - இங்கு
இளமையி லுள்ளோர் எழும்பட்டும்! - நல்ல
ஏற்றம் காணவே விரையட்டும்!

செயலில் காட்டவே முந்தட்டும்! - எதையும்
செய்தே வாழ்வில் உயரட்டும்! - வறுமைப்
புயலை எதிர்த்தே ஓடட்டும்! - வரும்
புன்மை யொழித்தே மீளட்டும்!

எதையும் எமதென உணரட்டும்! - நாடு
எமக்கு உண்டென அறியட்டும்! - பின்
எதையும் தமதெனச் செய்யட்டும்! - ஏன்?
எங்கும் போவான்? இருக்கட்டும்!

அறிவுக் கண்களைத் திறக்கட்டும்! - நல்ல
அனுபவ அறிவிலும் உயரட்டும்! - ஒளிப்
பரிவான் வருதல் போலாகட்டும்! - எங்கும்
பண்புள மக்களே பெருகட்டும்!

**வீரகேசரி 01-07-1967**

# அன்புத் துணைவிக்கு!

அன்புத் துணைவியே ஆரமுதே! - என்
ஆசைத் திருவே ஆருயிரே ! - உன்
அன்பு மடலையான் கண்டபின்னே - என்
ஆசைக் கனவும் அழிந்ததடி!

துன்பத்தின் எல்லையில் நீயிருந்து - வாடும்
துயரத்தைச் சொல்லியே வந்தமடல் - தினம்
இன்பக் களிப்பி லிருந்தயெனை - அது
இதயம் வெடித்திடச் செய்ததடி!

ஈழ மணித் திருநாட்டுக் குழைத்த - நம்
இன்பத் தமிழர்கோ யிந்த நிலை ! - அங்கு
வாழத் தெரிந்தும் வகையற்று நீயும்
வாடுதல் கண்டுளம் நோகுதடி!

நூறு வருடங்கள் வாழ்ந்தவனும் - அங்கே
நூற்படிப் பேதுமே யில்லாமல் - வெறும்
ஆறு போலோடி அயலவர்க்குப் - பொன்
அள்ளிக் குவிப்பதேன் சொல்லுமடி!

குடிசையில் நீயும் வாழ்ந்திருந்து - கஞ்சி
குடித்திட வழியுமே யில்லையென - அங்கு
அடிமையில் சிக்கி அல்லலுறும் - என்
அன்புத் துணைவியே கேளுமடி!

செல்வச் சிறுவர் இருவருமே - என்
சிந்தையி லெப்போதும் வருவதுண்டு - கல்விச்
செல்வ மேதுமவர் பெற்றதுண்டோ? - அந்தச்
செய்தியைப் பின்னே எழுதுமடி!

வீடுகட்ட பணம் வந்திடுமே - என
வேண்டிய ஏற்பாடு செய்திருந்தேன் - வெறுங்
காடுமட்டு மிங்கு காத்திருந்தால் - நம்
காலத்தை யோட்டுவ தெப்படியோ?

வீட்டுக்கு வீடுசங்கம் வைத்து - நீ
வீதி சிரிக்கவே வாழ்ந்ததுவும் - போதும்
நாட்டுக்குச் சேவை செய்தவரை - உனை
நாவாற வாழ்த்துவேன் வந்திடடி!

ஆசை தரும்புகழ் வார்த்தையினால் - உனை
அன்றுமுதல் தினம் இன்றுவரை - பிச்சைக்
காசையே காட்டிக் கழுத்தறுத்த - அந்த
கயவரை விட்டே வந்திடடி!

நன்றி மறந்தவர் கூட்டத்துக்கு - நீ
நன்மை செய்துமினிப் பயனுமிலை - தன்
கன்றி ழந்தபசு கதறுதல் போலங்கு
கவலை யுறுவதேன் வந்திடடி!

அறியாமை என்னும் இருட்டறையில் - நீ
அமிழ்ந்து கிடந்தது போதுமடி! - உன்
தெரியாத் தனத்தாலே தேம்புவதும் - இனித்
தேவையில்லை கண்ணே வந்திடடி!

வாழ்வி லுனக்கங்கே வளமுமில்லை ! - வரும்
வருவாயி லேதுமே மிச்சமில்லை ! - இனி
மாள்வ தோவங்குநீ வேண்டாமடி! - உடன்
மக்களுடன் வந்து சேருமடி!.

**வீரகேசரி**

17-06-1969

# புதிய கனவு

அல்லும் பகலுமென் னகத்தினிலே வந்து
ஆசையுணர்வு களூட்டிச் செல்லும் - மனக்
கள்ள மிலாக் கவிப் பெண்ணவள் மீதென்
களங்கமிலாக் காதல் பிறந்ததனால் - தூய
உள்ளக் கமலத்தி லுறைவிடம் தேடிய
உத்தமியின் மடி மீதினிலே - யான்
மெல்லத் தலைவைத்து மெய்மறந்தே துயில்
மேன்மையாய்க் கொண்டதோர் வேலையிலே...

கற்கள் பிளந்தே கடும் உழைப்பால்தம்
கவனத்தைக் கலையி லேபறிகொடுத்து - நல்ல
விற்பன்னர் நால்வர் விதம்வித மாயங்கு
வேண்டியவார் நற்சிலை வடித்தே - என்
கற்பனைக் கெட்டாத அள்புதப் படைப்பினைக்
காட்சிக்கு வைப்பதைக் கண்டதுமே - ஆகா!
சிற்பிகள் எங்கள் மலையகத் தே வாழுஞ்
சிறப்பினை மெச்சி யப்பால் நடந்தேன்!

உள்ளக் களிப்பிலே ஏறிச்சென்றே யொரு
உயர்ந்த மலைமீது நின்றபின்னே - யங்கு
மெல்லத் திரும்பியே நாற்புறமும் விழிகளை
மேய விட்டேன் நல்ல விருந்தாகி - மலை
வல்லவர் கள்கை வண்ணத்தினற் கோயில்
வானளாவி நிற்கக் கோபுரங்கள் - என்
உள்ளத் துணர்வி லொளிவிடச் செய்த
உவப்பில் லயித்தே யப்பால் நடந்தேன்!

மங்கள கீதமிசைத்து மெல்ல ஊர்ந்து
மலையினின் றோடுமருவி களைத் - தாண்டித்
தங்கமென ஒளிர் முத்துப் பனிகளைத் தாங்குந்
தளிர்களைத் தடவிக் கொண்டே - யானும்
எங்கள் குலம் வாழ் இருப்பிடம் கண்டேன்!
என்னே! அழகுமனைகள்! அவைகள்! - இன்று
அங்கே யிருந்த லயங்களோ அங்கில்லை!
ஆசைதீரப் பார்த்து அகம் குளிர்ந்தேன்!

எத்தனையோ பல வண்ணக் கலவைகள்
அத்தனையும் தன் அண்மையிலே - வைத்துப்
பித்தனைப் போல் தலையாட்டி யசைத்தேன்
பிஞ்சுக் கரத்தினில் தூரிகையால் - நல்ல
சித்திரங்கள் தீட்டிச் சிந்தை கவர்ந்தங்கு
சிங்காரம் என்பான் சிரித்திருக்க - என்
சித்தம் மகிழ்ந்திட வாழ்த்தி யவனையும்
சென்றேன் சிறுதூரஞ் சென்ற பின்னே,

ஆடை யணிகலன் பூட்டியதோர் மங்கை
அழகுச் சிலையென வந்துநின்றே - யந்த
மேடை யிற்பேசிய மிடுக்கின் சிறப்பிலே
மெய் மறந்தே சற்று நின்று விட - தினம்
கூடை முதுகிலே தொங்கவிட்டுச் சென்று
கொழுந் தெடுக்கும் நம்மமூக்காயி - என்று
மேடை யின்கீழொரு மெல்லிய குரல்கேட்டு
மேனி சிலிர்க்க நடந்து சென்றேன்!

துன்பத்தின் சாயலே இல்லாமல் கொடுந்
துயரத்தின் எண்ணமே யறியாத - மன
இன்பக் களிப்பிலே முகம்மலரச் செல்லும்
எம்மலை மங்கையர் அணிவகுத்து - நின்று
அன்ன நடையிலே அங்கு திரிந்திடும்
அத்திருக் காட்சியைக் கண்குளிரக் - கண்டே
என்னை யறியாமற் பண்ணிசைத்தே மெல்ல
எட்டி நடந்தே யப்பால் நடந்தேன்!

கட்டிடங்கள் பல அடுக்கடுக்காய்க் கட்டிக்
கலைவண்ணப் பொருள்கள் குவிந் - திருக்கக்
கிட்டியதை நன்கு கீழும் மேலுமாகக்
கிள்ளை மொழிபேசும் குழவிகளும் - மெல்ல
எட்டிப்பிடித்தும் இழுத்தும் அழகிலே
இதயம் பறிகொடுத் தேயிருக்க - மாட்டுப்
பட்டி போலங்கு முன் கண்ட வை யில்லாத
பாங்கறிந் தேபன் ணிசைத்துச் சென்றேன் !

பள்ளிச் சிறுவர் சிறுமியர் எங்குமே
பார்த்த யிடமெல்லாங் கூட்டமுமாய் - அங்கு
துள்ளித் திரியு மழகிலே கண்ணிமை
துடிக்காமலே கணநேரம் நின்று - கலை
அள்ளிச் சொறிந்தே அறிவை வளர்க்கும்
அறிவகங்கள் பல ஆங்கிருக்க - முன்பு
எள்ளி நகைத்த பலபேர்கள் அங்கேதாம்
ஏங்கிவிடும் மூச்சும் கண்டு சென்றேன்!

குன்றுக ளெங்கும் ஒலித்திடவே உரிமைக்
குரலெங்கும் ஏட்டிலே தீட்டிவரப் - பெரும்
மன்றங்கள் செய்யும் மதிப்பு மிக்கநல்ல
மாபெரும் தொண்டின் சிறப்பாலே - தினம்
என்றுமே கூட்டங்களோ மேடையிலே நம்
இளையோர் விழிப்பின் துடிப்பாலே - பார்!
இன்றும் ஒருபெரும் ஊர்வலத்தை என்
இதயம் குளிரவே கண்டு சென்றேன்!

மாடு போலிங்கு நாம் பாடு பட்டேமலை
மண்வள மெங்கும் பெருக வைத்து - இந்த
நாடு வளம்பெற நாமுழைத்தே இனி
நாயிலுங் கேடாக நாமிருக்கோம் ! - எங்கள்
நாடு குடியர சாக்கப்படும் இந்த
நல்ல தருணத்திலே எமது - உரிமைகள்
தேடும் பணியிலே கூடுமடா! என்று
தெருவெங்கும் ஊர்வலம் போகக் கண்டேன்!

புத்தகச் சாலையினுட் புகுந்தே ஆங்கொரு
புதுமையின் காவியக் கருத்தினிலே - என்
சித்தம் லயித்திடப் பித்தனைப் போல்நின்று
சிந்தை யொடுங்கிய வேளையிலே - வந்து
முத்தன் எனுமென் மித்திரன் மெல்லமாய்
முதுகினில் தட்டிய அதிர்ச்சியினால் - யான்
சித்தந் தெளிந்திடக் கண் விழித்தேயங்கு
சிரித்து விட்டேனம்மா! கனவல்லவா!

சைவச்சுடர்
30-11-1970

# குறிஞ்சி மண்ணிலே. . . .

வற்றிய சிறுவுடல் வண்ணான் சால் போல்
வயிறு பெருத்தும் வாயுடன் மூக்காய்
நெற்றியில் மயிரிழை பரப்பி மறைக்க
நீள்சடை பரட்டைத் தலையாய் இடையினில்
சுற்றிய ஒரு முழக் கந்தைச் சீலையோ
சுயநிர்வாணக் கோலங் காட்டும் ; கைப்
பற்றிய தோர் பழஞ்சட்டி யோட்டுடன்
பார்வதியும் வந்தமர்ந் தாளம் முன்றலில் . . .

வண்டி யுருட்டும் வடிவேல் கண்டிட
வரித்துக் கட்டிய கோவணத் துண்டுடன்
நொண்டி யடித்து வந்தவன் மெல்ல
நோவா தவள்புறம் குந்தக் கண்டதும்,
சண்டித் தனமுள தங்க வேலுவும்
சாதுவாய் அன்னவர் இடையில் புகுந்ததும்
மண்டி யிட்டுக் குலாவி இனிக்க
மகிழ்வாய்ச் சிறுமொழி பேசி மகிழ்ந்தான்!

தந்தையின் பதவியைத் தங்கவேல் ஏற்கத்
தாயின் பதவிக்குப் பார்வதி வந்திடச்
சொந்தக் குழந்தையின் பதவிக்கு வடிவேல்
சொகுசாய்க் குடும்பம் நடாத்த முனைந்தனர்!
அந்திப்பொழுதிது ''கூட்டாஞ் சோறு''
அன்னவரிருவரும் சமைத்திட வேண்டிக்
குந்தி இருந்துக் குமின்சிரிப் புதிர்த்தக்
குழவிகள் வாழ்வின் ஒத்திகை கண்டேன்!

கருங்கல் மூன்றினை அடுப்பாய் ஆக்கினர்
காய்ந்த ''மிலாறு'' விறகாய்க் கொண்டனர்
துருவிய ''தேங்காய் சிரட்டைகள்'' பானையாம்
தூசி படிந்த சிறுமணல் அரிசியாம்
கருநிறச் சாக்கடைக் கான்வழி நீரைக்
காய்ச்சும் உலை நீராகவும் மாற்றிப் பின்
உருவச் சிறுதேக் கழியகப்பை துலாவ
உண்ணுச் சோற்றின் பதமும் பார்த்தனர்!

முட்டை அவியலாம் தேயிலைக் கொட்டை!
முருங்கைப் பூவும் ''சுண்டல்'' ஆக்கிச்செம்
பட்டை சவுக்கில் உரித்துத் தரித்துப்
பாங்காய் ''ஆட்டுக்கறியும் சமைத்துக்
குட்டை நீரில் ரசமுங் காய்ச்சி வேலிக்
கொடி பசலியில் ''துவையல்'' செய்து
முட்டை ஓட்டை உண்கலம் ஆக்கியம்
மூவரும் உண்ணப் பகிர்ந்தனர் அங்கே!

உண்ணும் வகையில் வாயசை யிட்டு
உண்ணு துண்டபின் கைவாய் கழுவிக்
கண்ணு றங்கும் வேளை யாதலால்
கணத்த கற்களைத் தலையணை யாக்கித்தாம்
எண்ணிய படியே கிடைத்த விரிப்பு
எறும்புகள் மொய்த்த பீற்றல் பாயது
மண்தரை வீடாய் மனநிறை வோடு
மகிழ்வில் ஆழ்ந்து பொய்தூக்கங் கொண்டனர்!

அப்பா அம்மா அழுப்பில் உறங்க
அன்னவர் விழிக்கமுன் வடிவேல் எழுந்து
''பப்பாளிக் குழல்'' எடுத்து வாயில்
''பப்புப்பூ ...'' என வொலிக்க ஊதவும்
தப்பாமல் தாம் ''பிரட்டுக்குப்'' போகத்
தடபுடல் வேலைகள் செய்தே முடிக்க
''அப்பா! மகனேநீ அடுப்படி வேலையை
அவதானிப்பாய்'' என்றனள் அப்பா!

கடுகிப் பிழிந்து தேங்காய்த் துருவலில்
களிமண் பிசைந்து மாவாய் உருட்டி
நடுவில் உடையாப் பீங்கான் துண்டு
நாள் தோறும் புளங்கும் ரொட்டித் தகரமாம்!
அடுப்பை மூட்டி முன்னம் போலே
அவசர மாகவே ரொட்டியும் சுட்டதும்
படுக்கை விட்டேதா னெழுந்தவ னிப்போ
பல்துலக்கி முகம்கை யலம்பினான் !

வேலைத் தலமது வேலியோரம் வினாடி கழிய
விரைவாய் வீடு வருதல் போலவும்
வேலை யேற்றதும் பிரட்டுக் கலைந்து
விருப்புடன் வந்தே ''ரொட்டி சரியா?
வேகவை முகம் கழுவி வருவோம்'' என
வினாவை எழுப்பி முகம்கை யலம்பினர்
வேலனும் சுட்டான் ரொட்டியைப் பெற்றோர்
விரைந்தே யுண்டு மகிழ்ந்தே சென்றனர்!

7-06-1961

# மங்களப் பொங்கலோ பொங்குதடி!

மங்களப் பொங்கலோ பொங்குதடி! - எங்கும்
சங்கே முழங்குது கேளுங்கடி! - எங்கள்
தங்கத் திருநாளும் வந்ததடி! - கூடி
மங்கையரே கும்மி கொட்டுங்கடி

மாவிலைத் தோரணங் கட்டுங்கடி! - நல்ல
மாக் கோலம் போட்டிட வாருங்கடி! - மலர்
தூவித் திருவிளக் கேற்றுங்கடி! - ஒன்றாய்த்
தொழுது கும்மி யடிங்கடி!

வாழைகள் வாசலில் நிற்குதடி! - பின்னல்
ஓலைகள் தென்றலில் ஆடுதடி! - தென்னைப்
பாளைகள் பார்த்துச் சிரிக்குதடி! - பொங்கற்
பானைகள் பொங்கிடப் பாடுங்கடி!

மஞ்சளுடன் இஞ்சி வந்ததடி! - துள்ளிக்
கொஞ்சி விளையாடிக் கும்மியடி! - தமிழ்
வஞ்சிலே செங்கரும் பாடுதடி! - எங்கும்
பஞ்சமே பறந்திடக் கும்மியடி!

புத்தாடை யுடுத்தியே வாருங்கடி! - எங்கும்
புத்தொளி பிறந்திடப் பாடுங்கடி! - நம்
சித்தந் தெளிந்திடப் கும்மியடி! - மூடப்
பித்தர்கள் மாய்ந்திடப் பாடியடி!

ஏழை உழவனைப் பாடுங்கடி! - இங்கு
ஏற்றிப் பிழைப்போரைச் சாடுங்கடி! - வந்து
பாலைத் தரும் ஆவைப் பாடியடி! - தீய
பாவிகள் மறைந்திடக் கும்மியடி!

வீரகேசரி 15-01-1972

# மலைத்தாயின் புலம்பல்!

கான் கவிகள் கூத்தாடக்
கழனி இசை பாடும் - கலை
மான் மறைகள் மகிழ்வூட்ட
மயிலி னங்க ளாடும் - மலர்த்
தேன் சொரியும் தென்றலிடைத்
திரிந்து வரும் வேளை - கண்ணே
வான் அழுதே மலைமகனே
ஆ . . ராரோ! . . . வென்றேன்!

கொங்கை இரு குன்றிடைக்
கொஞ்ச விட்டுக் கிடத்தி - மலை
மங்கை எந்தன் முகிற் குழலால்
மறைய விட்டு மகிழ்ந்தேன்! - நம்
கங்கை புனல் நீராட்டிக்
களிப்படையச் செய்தே - வருஞ்
செங்கதி ரோன்முகம் காட்டிச்
செல்வம் உனை வளர்த்தேன்!

தீந்தமிழாம் அமு தூட்டித்
தின்னையிலே வளர்ந்தேன்! - குயில்
மாந்தளி ரில்விளை யாடும்
மகிழ்ந் தோடிச் செல்வாய் ! - பின்
''தாந்திமிதிமி'' . . . தரிகிடத் தோம்''
தளிர் நடன மிட்டாய்! - கூடி
வாழ்ந்துலக மொழி யனைத்தும்
வாரி யணைத் திட்டாய்!

கற்றுணர்ந்து கலை பயின்றாய்!
    காட்சி களைத் தந்தேன் - எனைச்
சுற்றிப்பல தொழி லனைத்தும்
    சுகம் பெறவே கற்றாய் ! - நீ
குற்றுயிராய் நின் றெமது
    குடி யுரிமை காத்தாய்! - உனைப்
பெற்றுவிட்ட பேர் உவகைப்
    பெரு மகிழ்வி லாழ்ந்தேன்!

அன்னை புகழ லோங்கிடநீ
    அவ தரித்த செல்வம் ! - மலை
மண்ணி லிங்கு பொன்னிலங்க
    மாண்பு பல செய்தாய்! - என்
கண்ணை விட்டு நீங்காத
    கலை மணியே வாராய் ! - நீ
என்னை விட்டு அகலாதே
    என் னருமை மகனே!

துட்டரிடம் எனை மீட்கத்
    துயரம் பல வுற்றாய்! - மதி
கெட்டவரை யழித் தொழிக்கக்
    கிளர்ந் தெழுந்து நின்றாய்! - நீ
பட்ட துயர் சொல் லொனாது
    பசுங் கிளியே செல்வம்! - மெல்லக்
கிட்டவந்து பேசடா யென்
    கிடக்கை சற்றுக் கேளாய்!

பச்சிலைப் பசுமையுடல்
  பகல வனால் காய்ந்து - வாய்
எச்சில் இன்றி நாவறண்டு
  இளைத்துவிட்டேன்பாராய்! - ஏன்?
மிச்சம் இன்றி அணிகலன்கள்
  மிகு பகையால் அழித்து - இங்கு
பிச்சை யுண்ணும் பிடிசோறும்
  பகிர்ந் தளிப்பாரில்லை!

இற்றை வரை நீயிருந்து
  எனை யிங்கு காத்தாய் ! - மலைப்
பற்று விட்டுப் பாசம்விட்டுப்
  பதற விட்டு நீயும் - ஏன்?
மற்று மொரு வீடு நோக்கி
  மனை யுடனே போறாய்? - இதோ!
சற்று நின்று ஏனைப்பாராய்
  சஞ் சலம் கொண்டேனே!

துன்பம் வந்த போதென்னைத்
  துய ரத்திலே விட்டு - நீ
இன்பம் வந்த போதுமகன்
  எங்கே தான் போறாய்? - இங்கு
இந்நிலையில் தவிக்க விட்டு
  இழைக் கின்ற கொடுமை! - அதால்
என்னிதயம் புண்ணாகி
  ஏங்கி நின்றேன் பாராய்!

கண்ணீரைச் சொரிய விட்டுக்
    காலந் தள்ளி வீணே! - யான்
மண் மீதில் மாண் டழிந்தால்
    மறு பிறவி வருமோ? - நீ
என்னிதயம் விட் டகன்று!
    எங்கே நீ போறாய்? - சொல்
கண்மணியே கலை மகனே!
    கடல் கடந்தோ போறாய்? . . .

வீரகேசரி
19-01-1967

# உரிமை முழக்கம்

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த
உழைக்கும் தோழரே! - தினம்
உழைக்கும் தோழரே! - உரிமை
வெற்றி கொண்டு வீர நடை
போட்டுச் செல்குவோம் ! - நடை
போட்டுச் செல்குவோம்!

நாட்டு மக்கள் உயரப் பணி
நாமும்செய்குவோம் ! - எந்த
நாளும் செய்குவோம் ! - மலை
நாட்டில் சொந்த வீடு கட்டி
நாமும் வாழுவோம்! - கூடி
நாமும் வாழுவோம் !

பட்டப் படிப்பு படிக்க நாமும்
பள்ளி செல்குவோம் ! - தினம்
பள்ளி செல்குவோம் ! - நாமும்
சட்டக் கல்வி கற்கக் ! - கலா
சாலை கட்டுவோம் ! - கலா
சாலை கட்டுவோம்!

பாட்டுக் கலை நிகழ்ச்சி யெலாம்
பரப்பச் செய்குவோம் ! - எங்கும்
பரப்பச் செய்குவோம் ! - இசை
கேட்டு மக்கள் மனம் மகிழும்
இனிமை செய்குவோம் ! - வாழ்வில்
இனிமை செய்குவோம்!

ஏட்டு ருவில் எழுத்துலகம்
இயங்கச் செய்குவோம் ! - ஒன்றாய்
இணையச் செய்குவோம்! - இலக்கியம்
தீட்டும் வல்ல தீரர் களின்
திறனைப் போற்றுவோம் ! - தமிழர்
திறனைப் போற்றுவோம் !

சுதந்திரன் 10-01-1959

# *வீரத்தோழர் தம் விந்தைகள் !*

உள்ளக் கமலத்தி லுறைவிடம் தேடியென்
உண்மை யுணர்விற் குயிரூட்ட வந்ததோர்
கள்ளம் அறியாக் கவிதைப்பெண் மடியிற்
காதற் கனிமொழி பேசித் துயில்கையில்
சொல்லத் துடிக்கக் கண்டதோர் கனவைச்
சொந்தத்தில் வைத்துச் சோர்வதில் பயனென்ன?
நல்லவர் நால்வர் நயமுடன் கேட்கவுமிந்
நானிலம் வாழவும் சொல்கிறேனம்மா!

ஆயிரம் ஓட்டைகள் அடுக்காய்த் தைத்த
ஆடைக ளுடுத்தி யாக்கையும் மெலிந்து
சேயினம் சிறுத்து நரம்புந் தோலுமாய்(ச்)
சீவாத் தலையும் சிந்தாமூக்கும் மற்றோர்
நாயிலும் கடையாய் நயக்கும் அன்னவர்
நகர்ப்புற மக்கள் போல் நாகரீகமாய்(ப்)
போயிடும் புதுமைப் பொலிவும் சிந்தப்
புத்தொழிற் காட்சிகள் கண்டேனம்மா!

எண்ணும் எழுத்தெனும் கண்கள் குருடாய்
ஏங்கித் தவித்த இளையோர் விழித்தெழப்
பண்ணொடு பாடிய பாரதிக் கனவின்
பண்பு நனவாகப் பள்ளிகள் பெருகி
மண்ணில் மாக்களாய் வாழும் மடமை போய்
மாண்புடன் மக்களாய் வாழும் தகைமையை
எண்ணிய என்மனம் இன்பத்தி லாழ்த்திட
இறவாக் காட்சிகள் கண்டேனம்மா!

குப்பை மேடுகளும் குழவியி னெச்சமும்
குட்டையின் நாற்றமுங் கூடியே வீசும்
இப் புவி மாக்கள் இருப்பிடம் போல் 'லயம்'
இருந்த எட்டடிக் கொட்டில் மறைந்து
துப்புராவாகத் தளிர் மலர்ச் சோலையின்
தூய நறு மணம் எங்கும் கமழ்ந்திட
ஒப்பிலா வுயர் மாடியின் வீடுகள்
ஒழுங்காய் வரிசையில் கண்டேனம்மா!

பறவைக ளடையும் பாழடை வீடாய்ப்
பாதியிற் சிதைந்த கலைகளின் கோபுரம்
அறவோ ரந்தணர் ஓதும் ஒலியும்
ஆட்டும் மணியின் ஓசையு மில்லை!
திறமிகு சிற்பிகள் செதுக்கிய சிலைகளும்
சேர்ந்தெழி லூட்டும் வானுயர் கோபுரம்
மறக்குல மக்கள் ஆக்கினர் இப்போ அம்
மாபெருங் கோயிலுங் கண்டேனம்மா!

பாதியி லுடுத்திப் பதைத்து நடுங்கிப்
பார்ப்போ ரிகழ்ந்து நகைத்திடு மளவு
வீதியில் நடக்க வெட்கிக் குனிந்து
வீர மங்கையின் துணிவு மிழந்தனர்
ஆதியி லுற்ற அம்மடமை தவிர்த்து
ஆக்கம் பெருகிட அறிவும் பெருகிடப்
போதிக்க மற்றோர் புகழும் நிலமைக்கோர்
பூவையை மலையகத்தில் கண்டேனம்மா!

பேசப் பயந்து பேய்களுக் கஞ்சியும்
காசைக் கரைத்துக் கள்ளைக் குடித்தும்
நாச வேலைக்கு நடுவாய் நின்றும்
நால்வகைத் துன்ப மேற்றுப் பணிந்து
பாச பந்தப் பிணைப்பா லுழன்றோர்
பாரில் வாழும் வாழ்வின் மின்னொளி
வீசத் திகழ்ந்த வீரத் தோழர்தம்
விந்தைகள் பலவும் கண்டேனம்மா!

குட்டக் குனிந்து கோழைக ளாயத்தம்
　குருதியைச் சிந்திக் குன்றம் ஒளிரப்
பட்ட துயரும் பல்லுயிர் ஈந்து
　பதைத்து துடித்த காலமும் உண்டே!
துட்டர் களென்னும் அட்டையி னுலித்
　துயவர் செல்வ மிழந்தனர் அந்தோ!
எட்ட இருந்து எள்ளி நகைத்தோர்
　இன்று வியத்தல் கண்டேனம்மா!

உரிமைகள் ஒன்றும் இல்லா அடிமையாய்
　உழைத்த காலம் ஓய்நதது குன்றில்
தெரிவது சுதந்திர வாழ்வின் உரிமைகள்!
　தெளிவில் மலர்ந்தநற் சிற்தைகள் விரிந்தன!
அறிவினை யறியா அசடர்க ளாக்கி
　அடக்கி யொடுக்கிய காலமும் தேய்ந்தே
வறியவர் வாழ்வில் வளமிகு ஊதியம்
　வாய்ந்தது வெல்லாம் கண்டேனம்மா!

அலையென பெருகும் ஆற்றலின் வேகம்
　அணைத்திடச் செய்த அன்னோர் தீய்ந்திட
விலை மதிப் பில்லா விந்தைசெய் வாழ்வின்
　வெற்றியின் விழைவால் விரிதமிழ்த் தந்த
கலையெலாம் வளர்ந்து களி கொளும் காட்சிகள்
　கண்டோர் வியக்கும் எழிந்திரு நாட்டின்
மலையெலாம் ஒளிர்ந்ததே! மடமைகள் தீய்ந்த நன்
　மக்கட் பெருமிதம் கண்டேனம்மா!

ராதா
09-01-1987
(வானொலியில்)

# தோட்டப் புறத்துநற் தோழியரே!

தோட்டப் புறத்துநற் தோழியரே! - ஒன்றாய்த்
தோளொடு தோள்நிற்று கூடுங்கடி!
நாட்டுக்கு நல்லது செய்திடவே! - எந்த
நாளுமே கைகொட்டிக் கும்மியடி!

வீட்டுக் குள்ளேநின்று செய்வதென்ன? - வெளி
வீதிதொறும் சுற்றிப் பாருங்கடி!
தீட்டிடு திட்டத்தை நல்வழியே! - வீர
தீரங்கள் செய்திடக் கும்மியடி!

சட்டி பிடிப்பது மட்டுமென்ன? - தமிழ்ச்
சங்க இலக்கியம் கற்போமடி!
கட்டி யுலகையு மாண்டிடலாம்! - பண்பு
கற்பும் நிலைத்திடக் கும்மியடி!

கூட்டத்தில் பேசிட வெட்கமென்ன? - நாம்
கூடியே பேசுவோம் கும்மியடி!
ஆட்டங்கலை பல கற்றிடலாம்! - மேடையில்
ஆடியங் காட்டிடக் கும்மியடி!

காட்டிலே தெம்மாங்கு மட்டுமென்ன ? - தமிழ்க்
காவியம் பாடிடக் கும்மியடி!
பாட்டுப் படிப்பும் படித்தறிந்தே - பெரும்
பாடகர் போற்றிடக் கும்மியடி!

தோட்டத்தில் கொழுந்து பறித்தாலென்ன? - விண்
　　தொட்டு வலம்வரக் கும்மியடி!
நாட்டில் மலையக மங்கையரே! - கலைகள்
　　நாலாவிதம் கற்கக் கும்மியடி!

அறிஞர் பெருமக்கள் தோன்றி மலையிலே
　　அயராது உழைத்திடக் கும்மியடி! - எங்கும்
அறியாமைப் பேய்கள் அகன்றிட வாழ்விலே
　　அறிவொளி பெற்றெழக் கும்மியடி!

வீரம் பெருகிய தீரர்கள் தோன்றிட
　　வீதியெங்கும் பாடிக் கும்மியடி! - நாம்
யாரும் அடிமைகள் அல்லோமிந் நாட்டிலே
　　யாரும் அறிந்திடக் கும்மியடி!

**சிந்தாமணி 10-10-1984**

# கொடுமை யடா குன்றில்!

தொடுக்காமற் போர் எதுவும்
தூயமனம் கேட்கும் - உரிமை
கொடுக்காமற் குழி தோண்டும்
கொடுமை யடா குன்றில்!

அட்டைகளாய் உறிஞ்சி நிதம்
அடிமைகளாய் ஆக்கி - வறுமைக்
குட்டையிலே தள்ளி விடும்
கொடுமை யடா குன்றில் !

எம்மறிவுக் கெட்டி நின்றால்
இவனுயர்வான் என்றே - மடமைக்
கும்மிருட்டில் தள்ளி விடும்
கொடுமை யடா குன்றில் !

ஏணிகளாய் நிற்கும் எங்கள்
ஏழைகள் மேலேறி - முகம்
கோணி நின்று தள்ளி விடும்
கொடுமை யடா குன்றில் !

பணியவைத்தும் பல் இளித்தும்
பாட்டாளி உழைப்பை - உண்டு
குனியவைத்துக் குட்டி விடும்
கொடுமை யடா குன்றில் !

ஏழைகளுக் கிரங்குதல் போல்
இன்முகத்தைக் காட்டி - வெறும்
கோழைகளாய் ஆக்கி விட்ட
கொடுமை யடா குன்றில் !

சங்கமெனும் மாய வலைச்
சங்கடத்தில் மாட்டி - அவனுக்குக்
கொங்கணெனும் பெயர் சூட்டும்
கொடுமை யடா குன்றில் !

சாதிவெறிச் சண்டை யெலாம்
சந்தியிலே கொட்டி - தலையைக்
கோதிவிட்டுக் குறி பார்க்கும்
கொடுமை யடா குன்றில் !

மாடாகி உழைக் கின்ற
மக்கள் பெறும் பணத்தைக் - கெட்ட
கோடாங்கி கொள்ளையிடும்
கொடுமை யடா குன்றில் !

கலைகளெல்லாம் வளர்த்து விடும்
கலைஞர்களின் வாழ்வில் - பெரும்
குலைநடுக்கம் ஆக்கி விடும்
கொடுமை யடா குன்றில் !

கெட்டித் தனம் பேசிநிதம்
கேடுகளைச் செய்வோர் - விடம்
கொட்டி யெங்கும் குவிக்கின்ற
கொடுமை யடா குன்றில் !

காலத்தைக் கனிய விட்டுக்
கன்னியர்தம் வாழ்வின் - இளமைக்
கோலத்தை கொள்ளை யிடும்
கொடுமை யடா குன்றில் !

வாலிபத்தை வதைக் கின்ற
வன்முறைகள் எல்லாம் - கொடுங்
கோலினத்துக் குறி யாகுங்
கொடுமை யடா குன்றில் !

வஞ்சமிலாப் பிஞ்சு களின்
வாழ்வினிலே வறுமைப் - பேய்க்
கொஞ்சிவிளை யாடு கின்ற
கொடுமை யடா குன்றில்

மொட்டுகளாய் இருக்கையிலே
முகையவிழ முன்னே - கருகிக்
கொட்டிவிழச் செய்யுந் தீய
கொடுமை யடா குன்றில்

சிந்தாமணி 15.9.1985

## *புறப்படு ! புறப்படடா!*

சித்தந் தெளியச் சிந்தனை விரியச்
சிரக்குஞ் செந்தமிழா ! - வா! வா!
புத்தம் புதியன புவியினிற் செய்ய
புறப்படு! புறப்படடா!

உத்தமரெல்லாம் உலகினி லுய்ய
உதவிய வன்தமிழா! - வா! வா!
நித்தம் உனதரும் நினைவே பெருகிட
நிகழ்த்திடு புதுமையெலாம்!

வித்தகனே ! என்விழி மணியேநீ
விரைவாய் எழுந்திடடா! - வரும்
புத்தாண்டில் புதுவாழ்வை யமைக்கப்
புறப்படு! புறப்படடா!

03.05.1975

# தோட்டத் தொழிற்துறைப் பெண்ணாள் !

தோட்டத் தொழிற் துறைப் பெண்ணாள் ! - முக
வாட்டந் தெளிவதும் எந்நாள் ? - பெருந்
தோட்டந் திரள்வதும் உன்னால் - உன்
கூட்டம் உயர்வதும் எந்நாள் ?

காட்டை வளமாக்கும் பெண்ணாள் ! - உன்
வீட்டை வளமாக்கு முன்னால் ! - வறுமைக்
கூட்டில் அடைபட்ட கண்ணே! - அடிமைப்
பூட்டை உடைப்பதும் எந்நாள் ?

வட்டத் துள்ளேவாழும் பெண்ணாள் ! - உன்
திட்டம் நிறைவேறல் எந்நாள் ? - கலைப்
பட்டம் பெறுகின்ற பொன்னாள் - வரின்
கொட்டம் அடங்கிடும் தன்னால் !

மட்டத் தடியேந்தும் பெண்ணாள் ! - மழை
கொட்டத் துணிந்தே நீ செல்வாய் - உனைத்
தட்டத் தடியேந்தி வந்தால் - வீரஞ்
சொட்டத் துணிந்தேநீ வெல்வாய் !

கூடைக் கயிறிட்ட தழும்பால் - நீ
கோழை எனச்சொல்ல லாமோ? - வல்லோர்
மேடை யிலேறிநின் றார்க்கும் - உந்தன்
மேன்மை யுரைத்திடு பெண்ணாள்!

தளிராயும் வளையோசைக் கையால் - இந்தத்
    தரணியில் புதுமைகள் செய்வாய்! - கொடுங்
குளிரோடு போராடும் பெண்ணாள் ! - தலை
    குனியாதே யுன்வீரங் காட்டாய் !

நாணற் புல்லாகி நின்றயேல் - வாழ்வு
    கானல் நீராகிடும் பெண்ணே! - காணும்
கோணல் வழிச்செல்ல வேண்டாம்! - உந்தன்
    கூனல் நிமிர்த்திடு பெண்ணாள்!

செல்வச் செழிப்புள்ள நாட்டில் - உன்
    சிந்தனைச் செல்வங்கள் எங்கே? - பெறும்
செல்வச் சிறுசுகள் எல்லாம் - கற்று!
    செகத்தி லுயர்ந்திடச் செய்வாய்!

அஞ்சி நடுங்கிடும் செல்வம் - பெற்றால்
    வஞ்சி யுனக் குண்டோ வீரம் ? - நீ
அஞ்சாப் பெருவீரச் செல்வம் - பெற்றுக்
    கொஞ்சி விளையாடு பெண்ணாள்!

வஞ்சம் அறியாத பெண்ணாள்! - தீய
    வஞ்ச கர்வலைவீசி ஏய்ப்பார்கள் - உனைக்
கொஞ்சி டவருவார்கள் கவனம்! - கற்பைக்
    கொள்ள வருவோரைக் கொல்வாய்!

பொல்லாப் பகல்வேடம் போடும் - தீய
    பூசாரி வந்துனை ஏய்ப்பான்! - அவன்
நல்லது உரைப்பதாய் நவின்றே - உனை
    நயவஞ்ச மாகவே கெடுப்பான்!

குள்ள நரிவேடந் தாங்கி - வரும்
குடுகுடுப் புக்காரன் வருவான் - பெருங்
கள்ளத் தனமுள்ள பசுவாம் - நீ
கவனமாய் வாழ்ந்திடு பெண்ணாள்!

சாமியின் பெயர்சொல்லி ஏய்க்கும் - தீய
சாத்திரக் காரனும் வருவான் - இந்தப்
பூமியில் உன்னை ஏமாற்றிப் - பிழைக்கும்
பூனையை விரட்டிடு பெண்ணாள்!

வீரத்தடி யேந்திச் செல்வாய் ! - உன்
வெற்றி யெலாமிங்கே காண்பாய்! - வல்ல
தீரர்தமை யெல்லாம் பெற்றால்- மடமை
தீய்ந்திடு மேயிங்கே காண்பாய்!

எத்தர்கள் வந்துனைச் சூழ்வர்! - உனக்கு
இரங்குதல் போலிங்கே நடிப்பர் - அந்தப்
பித்தர்கள் செத்திடச் செய்தால் -உந்தன்
பெருமை பிறந்திடும் பெண்ணாள்

வீரகேசரி
இலங்கை வானொலி
16-09-1985

# ஊருக்கே யூட்டும் ஒளியினைப் பார்!

கிள்ளத் தளிர்களோ மெல்லத் தினமவை
கிளைத்து வளர்கின்ற மேன்மையைப் போல் - மக்கள்
உள்ளஞ் சிதைக்கின்ற ஒண்ணாச் செயலினால்
உணர்ந்து பிறக்கின்ற ஒற்றுமைபார் ! - தினம்
அள்ளக் குறையாத செல்வம் பொழிகின்ற
அன்னை மலையகம் போலுயர்ந்து - வரும்
தெள்ளத் தெளிவாகத் தேடும் அறிவியல்
தெங்கினைப் போலங்கு உயருது பார் !

வெட்டிய தேயிலை வெய்யிற் பட்டேதினம்
வெந்து கருகிடும் வேதனை போல் - வறுமை
கொட்டிய கோலத்தில் கோவணம் இன்றியே
கூடித் திரிகின்ற குழவிகள் பார் ! - ஆங்கே
வெட்டிய வாதுகள் விட்டெழும் தளிர்களின்
வேகங் கிளர்ந்திடும் போலொருநாள் - வாழ்விற்
கிட்டிய கேவல வாழ்வும் மறைந்திடும்
கீழ்மை யகன்றே உயர்ந்தெழுவார்!

கூடிய கோதையர் கொய்த தளிர்களோ
கூடையிற் கூடிக் கனப்பதுபோல் - குன்றிற்
தேடிய எண்ணங்கள் தேங்கிக் கிடந்தவை
தேக்கத்தினாற் சுமை யாகுதுபார் ! - தினம்
வாடிய பச்சைத் தளிர்கள் வதங்கியே
வாட்டத்தினா லுரு மாறுதல்போற் - சுற்றி
ஓடிய சிந்தனை யோட்டத்திலே மக்கள்
ஊருக்கே யூட்டும் ஒளியினைப்பார் !

கொந்தளிப்பு 18-09-1986

# வாழப் புது வழி

முத்துப் புனலது முட்டிடும் வான்மலை
முகட்டினில் ஊறிவரும் - கூடிப்
புத்தம் புதுவழி பொங்கிடப் பொன்நெறி
புகட்டிப் பாடிவரும் - ஆடி
நித்தம் நிரையலை கக்கிடும் வெண்ணுரை
நிலவினில் ஆடிவரும் - மனப்
பித்தந் தெளிநிலை யுத்திகள் பொங்கிடும்
பெருநதி யோடி வரும்!

கிள்ளப் பசுந்தளிர் மெல்லக் கிளர்ந்தெழும்
செல்லப் பயிர்வளரும் - மலையில்
உள்ளப் பசிதீரக் கொள்ளை யழகுடன்
உயரத்தே பூமலரும் - நாம்
அள்ளக் குறையாத செல்வ முயர்ந்திடும்
அன்புமலை உயரும் - வாழ்வுப்
பள்ளம் உயர்ந்திட வெல்லுந் திறமுடன்
பச்சைத் தளிர் மிளிரும்!

ஆழக் கடலினில் கோலக் கலையொளிர்
ஆதவன் துயிலெழுவான் - பெரும்
ஞாலப் புதுமைகள் தேடித் தருமந்த
ஞானியும் ஒளிர்ந்தெழுவான் - எங்கள்
நீல மலையினில் காலைக் கதிரவன்
நேரினில் உயிர்த்தெழுவான் - கலைக்
கோலத் திருமகன் போலத் தொழில் மகன்
கொதியாய்க் கொதித் தெழுவான் !

மின்னும் ஒளிக்கதிர் மேவுங் கலவைகள்
மெல்லெனவே பரவும் - மலையில்
மின்னும் பனித்துளிப் பொன்னை யுருக்கிய
மென்மையதாய் ஒளிரும் - வளரும்
எண்ணக் குவியல்கள் ஏந்தும் உணர்வலை
இல்லமெலாம் பரவும் - எங்கள்
வண்ண மலையகம் வாழும் புதுவழி
வந்துளமே மலரும்!

சிந்தாமணி 05-06-1986

# பிஞ்சு உலகமே கேள்!

பிறந்த மேனியில் உலவும் மலையகப்
பிஞ்சு உலகமே கேள்! - உன்
சிறந்த மேனியைப் பார்க்குங் காலம்
சீக்கிரம் வந்திடா தோ ?

எலும்புந் தோலுமாய் ஏங்கித் திரியும்
இளைய உலகமே கேள்! - மனக்
கலக்கம் நீக்கிக் கவலைகள் போக்கிடக்
காலம் வராதோ சொல் ?

புழுதியிற் புரண்டு புழுவாய் நெளியும்
புதிய தலைமுறை யே! - கேள்!
அழுது வடியும் கண்ணீர் ஓய்ந்து
ஆறுத லடைவ தெப்போ ?

கல்வியெனும் ஒளிக் கண்களைக் காணா
மலையக மழலை களே! - நீங்கள்
பல்வி தக் கலைகளும் கற்றுத் தெளிந்து
பாரினில் உயர்வ தெப்போ ?

தோட்டத் துள்ளே தூங்கி வழியும்
தோட்டச் சிறுசுகளே! - உங்கள்
வாட்டந் தணிந்து வளர்மதி யாகி
வந்திடும் நாளும் எப்போ ?

அஞ்சி நடுங்கி யடங்கித் திரிகின்ற
அன்புக் குழந்தை களே! - உங்கள்
பிஞ்சு மனத்திலே அஞ்சாத வீரமும்
பிறப்பதும் எக் காலம் ?

மொட்டில் கருகி மடியும் மலராய்
முனங்கும் குழவி களே! - நீங்கள்
மொட்ட விழ்த்தே மணம் பரப்பி யுலகினில்
முந்தி வருவ தெப்போ?

வட்டத் துள்ளே சுற்றிச் சுழல்கின்ற
வளரும் இளசு களே! - நீங்கள்
எட்டச் சென்றே புதுமைகள் பார்த்தே
எழுச்சி பெறுவ தெப்போ?

வாடிய முகத்தில் வளர்கலை யின்றி
வதங்கும் தலை முறையே! - நீங்கள்
தேடிடும் வாழ்வும் தெளிவுமே பெற்றுத்
திகழ்வதும் எக் காலம்?

சோம்பித் திரிந்து சுறுசுறுப் பற்றுச்
சுகநல மில்லாக் குழந்தை களே! - உங்கள்
கூம்பிய உள்ளம் குமுறி வெடித்துக்
கொடுமை யொழிப்பதும் எப்போது?

சிந்தாமணி 26-10-1984

## போசன் திருநாள்

அன்பே யகிலத்தி லருஞ்சக்தி யழியாத
அன்பே யணைத்து மாகுமே! - அன்பாலே
ஆணவத்தை யடக்கி யருட்போதனை செய்யப்
போனதிரு நாளே போசன்

இலங்கை வானொலி
21-04-1971

# பகுத்தறிவுப் படைதிரள்க!

நாடு திருத்தி நற்பணி புரியும்
நல்லறி வாளர்காள் வருக! - மலை
நாடு திருத்தி யெந்நாளும் உழைக்கும்
நற்றலை வர்காள் வருக! - மன
வீடு திருத்தி வினைகள் போக்கிடும்
வித்தகர் பலரும் வருக! - பற்றைக்
காடு திருத்திக் கழனி யாக்கிய
காவலத் தோழர்காள் வருக!

உடல் பொருளாவி யர்ப்பணம் செய்யும்
உத்தம் சீலர்காள்! வருக! - மலைக்கு
உடலை உரமாய் ஆக்கிச் செல்லும்
உண்மை வீரர்காள் வருக! - துன்பக்
கடலை நீந்தும் கன்னித் தமிழா!
கலங்கா தேநீ வருக! - மனத்
திடமே பெற்றெழத் தெருவெல்லாம் முழங்கித்
திரண்டே படையாய் வருக!

கண்ணீர் சிந்திக் காலங் கழிக்கும்
கற்புக் கரசிகாள் வருக! - மழை
எண்ணிக் கொட்டிட ஏந்தி யுழைக்கும்
எங்கள் தாய்க்குலம் வருக! - வீரத்
திண்ணிய ராகத் திகழும் இளைஞர்கள்
திரண்டே படையாய் வருக! - மனம்
எண்ணிய நல்வழி யேற்ற மடைந்திட
எங்குந் திரண்டே வருக!

அன்புச் சோதர சோதரிகாள் இங்கு
அணியணி யாகவே வருக! - தம்
என்பும் உருக ஏங்கித் தவிக்கும்
இளைய சிறுவர்காள் வருக! - தமிழ்ப்
பண்பும் வளரப் பகுத்தறி வோங்கப்
படையாய்த் திரண்டே வருக! - எம்
உண்மை யுணர்ந்தும் வழிதனைக் காட்டிட
ஊரே திரண்டு வருக!

மலைமகள் 03-09-1961

# செய்யும் தொழிலே தெய்வம் !

நாடு செழிக்க வேண்டும் ! - மலை
நாட்டா ரென்றும் வாழ வேண்டும் !
காடு திருந்த வேண்டும் ! - பற்றைக்
காடெல்லாம் வள மாக வேண்டும் !

பஞ்சம் பறக்க வேண்டும் ! - நாம்
பணம் காசெல்லாம் தேட வேண்டும் !
கஞ்சல் வாழ்வைப் போக்க வேண்டும்! - நாம்
கவன மாக வாழ வேண்டும் !

மாரி மழை பெய்ய வேண்டும் ! மலை
மண் வளங்கள் பெருக வேண்டும் !
தேறி மலை ஏற வேண்டும் ! - வேலை
தெம்பாக நாம் செய்ய வேண்டும்!

(வேறு)

கொங்காணி போட்டாலும் கங்காணி பேச்சை நாம்
கொண்டு மனத்திடைப் பொறுத்திடுவோம்!
சங்கொலி கேட்குமுன் சட்டப்படி வேலை
சாவதான மாய்நாம் செய்திடுவோம் !

தலையிலே கூடையும் கையிலே கம்புமாய்க்
கொண்டு நாம் குன்றுகள் ஏறிடுவோம் !
மலையே பெயர்ந்தாலும் நிலையே குலைந்தாலும்
மானெனத் துள்ளியே சென்றிடுவோம் !

(வேறு)

வங்கி ஒடிக்க வேண்டும் ! - பக்க
வாதுகளும் வெட்ட வேண்டும் !
தொங்கி விழும் காம்புகளை - நாம்
தோதாய் வெட்டிப் போடவேண்டும் !

அரும்பும் ஒதுக்க வேண்டும் ! - தளிர்
அழகாக நாம் கொய்ய வேண்டும் !
விரும்பும் தளிர் கொய்ய வேண்டும் ! கை
வேகமாகச் செல்ல வேண்டும் !

(வேறு)

மூட்டுப் பிடுங்கை ஒதுக்குங்கடி ! - வரும்
முற்றல் இலைக்காம்பைத் தள்ளுங்கடி!
கோட்டுக் கணக்கர் வருவாரடி ! - பேரு
வெட்டில் சம்பளம் இல்லையடி !

(வேறு)

குயி லோசை கேட்குதடி! - பெண்கள்
குர லோசை மிஞ்சுதடி!
மயில் போல் நடம் புரிந்து - நாம்
மலை இறங்கி வருவோமடி!

நதி யோசை கேட்குதடி! - பெண்கள்
நகை யோசை யொலிக்குதடி!
குதி யோசை கொஞ்சுதடி ! பனிக்
குளி ரோட்டம் வீசுதடி!

வள்ளி கவன மடி ! - இந்த
வட்டப் பாறை வழுக்குமடி!
எள்ளி நகைப் பாரடி! - பிள்ளை
ஏள னங்கள் செய்வாரடி !

அட்டை கடிக்கு மடி! - நீ
அசட்டை யாக யிருக்காதேடி!
பட்ட மரக் கிளைநடுவே - கிளி
பாங் காகப் பாடுதடி !

(வேறு)

சிவக்கச்சிவக்க நீ வெற்றிலை போட்ட பின்
சேதிகள் சொல்லடி மீனாச்சி ! - வா
சவுக்கு மரத்தடி நிழலுக்குக் கீழே நாம்
சஞ்சலம் நீங்கிடப் பேசிடுவோம் !

செய்யும் தொழிலையே தெய்வமாய்க் கொண்டுநாம்
சேவை செய்தே பொருள் தேடிடுவோம்!
கொய்யும் தளிர்களால் குவலயம் வாழ்ந்திடக்
கொட்டும் மழையிலும் உழைப்போ மடி !

நாடக விழா நாட்டியத்திற்காக
தினகரன் 28-04-1985

# காணி நிலம் வேண்டும்!

வள்ளி :

காடு கரையிருக்கு ! கவனிக்க யாருமில்லை!
வீடு வாசல் கட்டியிருக்கு ! விளக்கு வைக்க நாதியில்லை!
நாடு விட்டு நாடு வந்து நாம் போக நாளாச்சி
தேடுவதைத் தேடிக் கொண்டு சீக்கிரமாய் போகவேணும்

வேலன் :

பாடுபட்டுத் தேடிவைத்துப் பரலோகம் போனாரே !
பாட்டனார் சொத்தெல்லாம் பறிமுதலாய்ப் போச்சேடி !
வீடு வாசல் ஒன்றுமில்லை! காடுகரையு மில்லை!
தேடுவதில் மிச்சமில்லை! தென்சீமை போவதெப்போ?

வள்ளி :

அக்கரையு மில்லாமல் இக்கரையு மில்லாமல்
அவதிப்பட்டு நிற்காமல் ஆழமாய் யோசியுங்க!
தக்க நடவடிக்கை தவறாமல் எடுத்திடுங்க!
தாருமாறாய்ச் செலவழித்துத் தடுமாறி நிற்காமல் !

வேலன் :

பிள்ளைகுட்டி எட்டுப்பேரு பெருத்த குடும்பமடி!
பிழைக்கவழி தேடாமல் பிறகென்ன செய்வேனடி!
கள்ளைக் குடித் தழித்துக் காசெல்லாம் போச்சுதடி!
கவனமாய் நடக்காவிட்டால் கவலை வந்து சேருமடி!

வள்ளி :

இந்தப்புத்தி முன்பிருந்து ஈழத்தில் நாமிருந்தால்
எந்தக் கவலையுமே எங்களுக்கில்லை மச்சான்!
சொந்தப் புத்தியில்லாமல் சோக்கா செலவழித்தால்
சுகமாக வாழத்தான் முடியுமோ சொல்லு மச்சான் !

வேலன் :

போதுமடி வள்ளியிப்போ புரியுதடி புத்தியிப்போ!
பொல்லாங்கு நேராமல் பிழைக்கவழி தேடிடனும்!
காதுகொடுத்துக் கேளு! காத்தானும் சொல்லுகிறான்!
கண்டியிலே ரெண்டு ஏக்கர் காணிவாங்கிப் போடணுமாம்

வீரகேசரி
06-06-1960

# போலிகள் கவனம்!

கஞ்சிக் குடித்து வேலைத்
தஞ்சம் என்று நீ யிருந்து
அஞ்சியஞ்சி வாழுறியே தம்பி! - நீ
அஞ்சியஞ்சி வாழுறியே தம்பி! - உனை
வஞ்சக மாய்ச் சுற்றிவந்து
கெஞ்சி வரும் போலிகளும்
மிஞ்சிவிளை யாடுறாண்டா தம்பி ! - உனை
மிஞ்சிவிளை யாடுறாண்டா தம்பி ! - போலித்

தாடியை வளர்த்து ஒரு
தடியையு மூண்டி வந்து
தள்ளாடித் திரிவாண்டா தம்பி !- போலி
தள்ளாடித் திரிவாண்டா தம்பி !- வாசற்
படியேறி வந்து அட்டைப்
பிடியாய்ப் பிடித்து நின்று
மடியைத் தடவுவாண்டா தம்பி !- பெட்டி
அடியைத் தடவுவாண்டா தம்பி! - பெரும்

வட்டிக்கு வட்டி தாறேன்
கட்டிவா பணத்தை யென்று
காட்டுகிறான் வெளிவேசம் தம்பி ! - உனக்குக்
காட்டுகிறான் வெளிவேசம் தம்பி ! - நீ
மாட்டிக் கொண்டு வலையிலே
தீட்டு கின்ற திட்டத் திற்குப்
போட்டிடாதே புத்தியைநீ தம்பி ! - மயங்கிப்
போட்டிடாதே புத்தியைநீ தம்பி ! - சொந்த

விருந்தாளி போல வந்து
கருங்காலி வேசம் போட்டு
இரும்பாய் இருப்பானே தம்பி! - வீட்டில்
இரும்பாய் இருப்பானே தம்பி - இரவுக்
கருக்கயில் எழுந்து மெல்ல
இருப்பதைக் கட்டிக் கொண்டு
கம்பியை நீட்டுவாண்டா தம்பி ! - நீயும்
கவனமாய்க் காலந்தள்ளு தம்பி ! - இன்னும்

ஏய்த்துப் பிழைப்பவர்கள்
ஏராளம் உண்டு நாட்டில்
ஏமாந்து போய்விடாதே தம்பி! - நீயும்
ஏமாந்து போய்விடாதே தம்பி! - அறிவைத்
தீட்டியொரு திட்ட மிட்டு
ஓட்டிவிட வொருவழியை
நாட்டில் நிலைக்கச் செய்வாய் தம்பி ! - அது
ஏட்டில் நிலைத்து விடும் தம்பி! (கஞ்சி)

நாடகத்திற்காக 07-03-1962

## விரைந்தெழு நங்காய்!

பிரிதி போலொளிரப் பட்டொளி வீசிடும்
பாவலன் பாரதி யாண்டினிற் றோன்றிய
அரிவை யேயுன் அறிவொளி எங்ஙனினும்
அகிலத் தொளிர்ந்திடச் செய்திரு! நீயோ
விரித மிழ்ப் புலமையில் வென்றிடமாதே!
விரைந்தெழு! நங்காய் வெற்றி யுனக்கே!
அரிதி னுமினிய திவ்வுலகினிற் றோற்றமாம்
அகங்குளிர்ந் தெழுக! என் வாழ்த்தே!
30-07-1982

# கவிமழை பொழியும் நாடு!

இயற்கை யழகினை யள்ளிப் பருகிடும்
இன்பத் தமிழ் மலை நாடெங்கள் நாடே! - நாம்
உயரும் வழியினை ஊட்டி வளர்த்திடும்
உள்ளங் கவர்ந்தமலை நாடெங்கள் நாடே!

அருவி யிசையிட்டுத் தாலாட்ட நல்ல
அழகு மலர்தூவும் நாடெங்கள் நாடே! - வானக்
கருக்க லில் மேகங் குவிந்து வரமலைக்
கண்களைப் பொத்திடும் நாடெங்கள் நாடே!

தேயிலைத் தளிர்கள் அசைந்தாட இசைத்
தேனீக்கள் சுற்றும் நாடெங்கள் நாடே! - சிவந்த
காகிதப் பூக்கொடிச் சுழன்றாட மலைக்
காட்டாறு வளங்கூறும் நாடெங்கள் நாடே!

பச்சை பசுமை நிறைந்திருக்க யெங்கள்
பாவையர் பாடிடும் நாடெங்கள் நாடே! - மலைக்
கொச்சைத் தமிழ் அசைபோடக் குழவிகள்
கொஞ்சி விளையாடும் நாடெங்கள் நாடே!

பொன் பொருள் அள்ளித் தந்தே துயர்
போக்கும் திருமலை நாடெங்கள் நாடே! - மலை
மண் குளிரமனங் கவர்ந்திழுக்கும் இன்பக்
கவிமழை பொழியும் நாடெங்கள் நாடே!

07-03-1958

# போராட்டம்!

போராடிப் போராடிப் பெற்றேவாங்கும்
பொல்லாத போராட்டம் உந்தன்வாழ்வில்
வேரோடி விட்டதிந்த செய்தியெங்கும்
விண்முட்டக் கேட்குதடா! பழிக்குதடா!
பாரோடு போரிட்டு உழைக்கும் நல்ல
பாட்டாளி யுனக்கிந்த விதியோவென்று
தூரோடு தூக்கியெறி போராட்டத்தைத்
துடித்தெழுந்து புதுவழிநீ காணவாடா!

உணவுக்கும் உரிமைக்கும் போராட்டம்!
உறையும் குடிசைக்கும் போராட்டம்!
உழைக்கும் தொழிலுக்குப் போராட்டம்!
ஊதியம் பெறுவதிலே போராட்டம்!
மழையிலும் பனியிலுமே போராட்டம்!
மயக்கும் வெய்யிலிலே போராட்டம் !
குணமுள்ள பாட்டாளி குனிந்தேவாழும்
குறை நீக்கத் தூக்கியெறி போராட்டத்தை!

அடிமைவாழ் விட்டொழித்து எழுகநீயும்!
அஞ்சாமல் புதுவாழ்வைத் தொடர்கநீயும்!
படிப்பறிந்து வாழ்வுக்கு வழியைத் தேடு!
பகட்டாளர் பேச்சிலே மயங்காதேடா!
குடிமக்கள் ஆட்சியிலே பூரித்தார்கள்
''குடி'' மக்க ளாயின்னும் குனிவதேனோ?
அடிமையாய் அடங்கிநீ வாழ்வதாலே
அனுதினமும் போராட்டம் வந்தேதீரும்!

மனிதனுக்கு மனிதனே அடிமையாகி
மாக்களாய் வாழுகின்ற வாழ்வும் ஏனோ?
மனிதனுக்குச் சுதந்திரமாய் வாழ்வைத்தந்தே
மறைதந்த மாத்தலைவன் உலகை ஈந்தான்!
மனிதவுடல் பெற்றிருக்கும் மனிதனே உன்
மதியெங்கே? மதியைநீ மதித்தேயெழு!
புனிதவாழ் வென்றுமே பூண்டு விடு!
புத்தியைத் தீட்டியெழு! போராட்டம் ஏன்?

தனித்தியங்கத் தொழிலொன்றைத் தேடி விடு!
தரணியிலே காணிநிலம் பெற்றுவிடு!
தனிக்குடும்ப மாகிவிடு மனைமக்க ளுடனே!
தலைகுனியாய்! தளபதியாய் ஆவாய் நீயோ?
தலைகுனிந்த வாழ்வில்லை தரணியிலே!
தலைசுற்றும் போராட்ட வாழ்வு மில்லை!
நிலைபெற்ற வாழ்வமைத்து நீடுவாழ
நீயெழுந்து வருவாயோ பாட்டாளியே!

தினகரன் 01-05-1984

## காதலூட்டுங்காளை

நறையுண்ட வண்டாடும் போலிரண்டு
நயனங்க ளாடயிளம் மீசையோடு
கறைகொண்ட கேசமது காளையிவன்
கனிமுகத்துக் கழகூட்டக் காதலூட்டிச்
சிறைப்பட்ட சிங்கார் எவள்தானென்று
சிந்தையெலாம் நொந்திங்கே வாழநிதம்
குறைபட்ட கோதையரின் குமறியுங்
குறியோடு கைதாங்கிச் சிந்தித்தானோ?

சிந்தாமணி படக்கவிதை
12-05-1986

# புறப்படடா ! புத்துலகைக் காண்பதற்கே!

வரை நிகர்த்த வலிமைமிக்க தோளுமுண்டு!
வானிகர்த்த தோழர்களின் வீரமுண்டு ! - மலைத்
தரை வளர்த்த பெருமைமிக்க தீரமுண்டு!
தன்மானத் தகைமைவாழ் திறனுமுண்டு! - ஆழித்
திரை போலத் திரண்டுவரப் படையுமுண்டு!
திக்கெட்டும் வன்மை பெற வெற்றியுண்டு! - இங்கே
புரை யோடும் புல்லர்களின் புன்மை நீக்கிப்
புறப்படடா! புத்துலகைக் காண்பதற்கே!

உரிமைக்கே வழிதேடி முழக்க மிட்டோம்!
உள்ளதும் நாளடைவில் பறிக்கப் பட்டோம்! - மனம்
பிரிந்தமை கண்டேயாம் துயர முற்றோம்!
பின்னுமொரு துயருக்குள் ஆழ்ந்துவிட்டோம்-எளிமை
தெரிந்துமே அடிமைக்குள் ளாக்கப் பட்டோம்!
தேம்பியே அழுங்குரலால் ஓலமிட்டோம்! - இனி
அரியதோர் வழிதேடி மீட்சி பெற
அஞ்சாதே புறப்படடா! மலைத்தமிழா!

தீத்தாவும் விழியோட்டும் வண்ணம் வேண்டும்!
தீரர்களின் தோள் புடைக்கும் தின்மை வேண்டும்! - உயிர்
காத்தருளும் தலையறமே நமக்கு வேண்டும்!
காலனையும் வெல்லும்திறன் நமக்கு வேண்டும்! - மனம்
பூத்திட்ட புது மலராய் மாற வேண்டும்!
பொல்லாத ஆயுதப்போர் நமக்கு வேண்டாம் - தீமை
நாத்தடுக்கும் வல்லமையே நமக்கு வேண்டும்
நடப்பாய் நீ சிறப்போடே மலைத்தமிழா!

அன்னையிவள் மலைத்தாயும் அழுதழுது
ஆறாக வழிந்தோடும் கண்ணீர்வெள்ளம் ! - மணிப்
பொன்னை யுதிர் நாடுவிட்டுப் போகுந்துயர்
பொறுக்காமல் முகிலுடையாள் முகம் புதைத்தாள்! - மக்கள்
தன்னிலையில் நிலைகலங்கித் தவிப்பதாலே
தங்கநிகர் ஒளிக்கீற்றுத் தலைவன் தானும் - அண்ணார்
முன்னிலையில் நிற்கமனம் கோணுகின்றான்! - ஐயோ!
முந்தியெழுந் தேநடடா! மலைத்தமிழா!

தழையாடத்தளிர் பரப்பிக் கொம்படர்ந்து
தண்ணிறையைத் தரைகாத்து நிற்கும்பெரும் - சவுக்கு
மழைபொழியக் குளிர்வாட்டும் நிலையிலவை
மண்ணிலே வாட்டமுற அசையா நிற்கும்! - அந்தோ!
உழைப்பாளி மக்கள்துயர் போக்கவேண்டி
உண்மையது நின்றறியப் பாரடாநீ! - விடுப்பாய்
அழைப் பைநம் மக்கள் அனைவர்க்குமே
அணிதிரண் டெழச்செய்வாய் மலைத்தமிழா!

புள்ளினங்கள் பாடவில்லை! தேனுண்ணும்
பொன்வண்டு ரீங்காரம் செய்ய வில்லை! - சருகை
அள்ளிவரும் வளியேதும் அசையவில்லை!
அருட்கந்தன் வாகனனார் ஆடவில்லை! - மலையில்
துள்ளிவரும் புனலருவி பாடவில்லை
துதிபாடும் தும்பிகள் இசைக்கவில்லை! - மலரைக்
கிள்ளிவரும் பெருநதியும் பாயவில்லை
கிளம்பிவிடு இப்போதே மலைத்தமிழா!

வீரத்தின் குன்றேறிச் சென்று நீயும்
விண்ணதிரும் வெற்றிக்கே வழியமைப்பாய் - தமிழ்த்
தீரத்தின் விளைநிலமாய் ஆக்கிச் செல்வாய்
தீந்தமிழின் வரலாற்றில் இடம் பிடிப்போம்! - கடுங்
கோரத்தின் விழிதுயரைப் போக்கி எழுவாய்!
கொந்தளிக்கும் நம்மினத்தை மீட்டுவருவாய்! - வெற்றி
ஆரத்தின் அணியாலே அழகு செய்வாய்
ஆடி நட மலைமகனே! ஆள்வதற்கே!

வகவம்
10-07-1964

# சித்தந் தெளிந்திடில் . . .

புத்தம் புதிய தளிர்கள் மலையினில்
நித்தம் மலருதடி ! - முத்தம்மா
நித்தம் மலருதடி! - உந்தன்
நித்தம் தெளிந்திடில் புத்தம் புதியன
நித்தம் புலருமடி! - முத்தம்மா
நித்தம் புலருமடி!

வெட்டிய தாலந்தக் கட்டையிலே முளை
முட்டி யரும்புமடி! - முத்தம்மா
முட்டி யரும்புமடி! - உனைத்
திட்டி யதால்தளிர் விட்டெழும் எண்ணங்கள்
எட்டி வளருமடி! - முத்தம்மா
எட்டி வளருமடி!

பொங்கி வழியும் புனலருவி மலை
எங்கும் இசைக்குதடி! - முத்தம்மா
எங்கும் இசைக்குதடி! - எழும்
எங்கள் மலைகள் உள்ளம் உவகையால்
பொங்கி மகிழ்வாளடி! முத்தம்மா
பொங்கி மகிழ்வாளடி!

கொட்டும் பனியிலே முட்டிவருந் தென்றல்
பட்டுக் குளிருதடி ! - முத்தம்மா
பட்டுக் குளிருதடி ! - உந்தன்
திட்டப் படிவாழ்வு கிட்டி வருகின்ற
வட்டம் வளருதடி! - முத்தம்மா
வட்டம் வளருதடி!

கொஞ்சிக் கிளிபாடும் கோலஎழில் எங்கும்
மிஞ்சி வளருதடி! - முத்தம்மா
மிஞ்சி வளருதடி! - இங்கு
அஞ்சி யொடுங்கிய அவலம் அடங்கிய
வஞ்சி வருவாளடி! - முத்தம்மா
வஞ்சி வருவாளடி!

குட்டையிலே நாறும் மட்டையில் ஒட்டிய
அட்டை விலகுமடி! - முத்தம்மா
அட்டை விலகுமடி! - நீற்றுப்
பட்டை தரித்திங்கு தட்டிப் பறிக்கின்ற
கட்டை மறையுமடி! - முத்தம்மா
கட்டை மறையுமடி!

புத்தம் புதுமலர்ச் சிந்திப் பசுந்தரை
மெத்தையும் ஆனதடி! - முத்தம்மா
மெத்தையும் ஆனதடி! - மலை
அத்தை மகளந்த உத்தமியாள் வரின்
நித்திரை ஏதுக்கடி! - முத்தம்மா
நித்திரை ஏதுக்கடி!

வெட்டிய தேயிலைக் கட்டையிலே பாசான்
தட்டித் துலங்குதடி! - முத்தம்மா
தட்டித் துலங்குதடி! - உன்மனத்
தட்டினிலே நன்கு ஒட்டிய தூசிகள்
தட்டித் துலக்குமடி! - முத்தம்மா
தட்டித் துலக்குமடி!

சிந்தாமணி
13-02-1988

# உறக்கம் தெளிவது எப்போது?

இருண்ட வாழ்வில் இதயம் உறங்குது!
இன்னொளி பெறுவ தெப்போ? - எங்கும்
மருண்ட வாழ்வில் மலையகம் உறங்குது!
மண்ணில் உயர்வ தெப்போ?

உள்ளத் துள்ளே உணர்வும் உறங்குது!
உணர்ச்சி எழுவ தெப்போ? - உரிமை
பள்ளத் துள்ளே பதுங்கி யுறங்குது!
பாரினிலே உயர்வ தெப்போ?

கல்வி யறிவுக் கண்கள் உறங்குது!
கலைகள் வளர்வ தெப்போ? - மலையில்
பல்கிப் பெருகிய பண்புக ளுறங்குது!
பசுந்தமி ழுயர்வ தெப்போ?

வஞ்சகப் பேயும் நெஞ்சி லுறங்குது
வாழ்வு மலர்வ தெப்போ? - இங்கு
எஞ்சிய வாழ்வும் ஏழ்மையி லுறங்குது!
எழுச்சி பெறுவ தெப்போ?

சித்தந் தெளியாச் சிந்தனை யுறங்குது!
சிறுமை யகல்வ தெப்போ? - மனப்
பித்தந் தெளியாப் பேரொளியுறங்குது!
பேரிருள் களைவ தெப்போ ?

புத்தம் புதியன புந்தியில் உறங்குது!
புதுமைகள் நிகழ்வ தெப்போ? உழைக்கும்
உத்தம மக்களின் உதயம் உறங்குது!
உண்மையில் விழிப்ப தெப்போ?

சிந்தாமணி 06-04-1985

# மாவலித் தாயே சொல்!

மலை யிடுக்கில் ஊற்றெடுத்த
மாவலித் தாயே! - எங்கள்
நிலை யுமக்கு இன்றுவரை
புரியலையோ தாயே!

கலை வளரக் கருத்தெடுத்துக்
கவனமதில் கொண்டு - சிற்பச்
சிலை வடித்துக் கோயில்களைச்
சிகரமெங்கும் அமைத்தோம்!

தலை கொடுத்து மலைவளரத்
தரைசெழிக்க உழைத்தோம்! - பச்சை
மலை முழுதும் மதிமயக்கும்
மாவீரம் செய்தோம்!

அலை போலத் திரண்டுவந்த
அல்லல் பலவேற்றோம்! - ஈரற்
குலை நடுக்கும் வெம்பனியின்
கொடுமை பலவேற்றோம்!

விளை பயிர்கள் பொன்னாகும்
விந்தை மிக செய்தோம்! - உடல்
களைப் படையச் சலிப்பு மறக்
காலமிதை வென்றோம்!

அடிமைப்பிடியிலே எமையடக்கி
அவல வாழ்வையே எமக்கீந்து - தினம்
கொடுமை யிழைத் தென்றுமே வாழ்வினில்
குனியவே வைத்திட்ட குறையை நீ பாராய்!

ஊதிய உயர்வில்லை! உரிமைகள் பல இல்லை!
ஊரறியச் சொல்லியே திட்டுகின்றார்! - நாம்
நாதிய ற்றிங்கு நடைபிண மாகவோ
நாளெலா மிங்கு வாடுவதோ?

கல்விக் கண்களைத் திறக்க முடியாமற்
கவலையி லெம்மை ஆழ்த்தினரே! - எம்
செல்வக் குழந்தைகள் சிந்தனை யறியாத
சீவியம் நடத்துதல் முறையோ?

காலை முதல் மாலை வரையுன் போக்கில்
கடுகதியில் செல்லும் தாயேநீ! - இவ்
வேலை தரும் பொருளுணர்ந் தேயெமக்கு
ஒருவார்த்தை சொல்லாயோ மாவலித்தாயே!

மலைமகள் 05-03-1962

## *திரு வாழ்வைத் தா!*

வானில் மிதக்கின்ற தாரகையே
வற்புத அன்புத் திருவுருவெ! - நறுந்
தேனின் சுவை தரும் தெள்ளமுதே!
தெவிட்டாத் திருவாழ்வைத் தந்துவிடு!

என்றுமே யுன்நினை வாகுதடி!
எல்லாம் உனக்கென்றே வாழ்ந்தேனடி!
ஒன்றுமே எண்ணத்தில் ஓடவில்லை!
ஓய்ந்தே இருக்கவோ நேரமில்லை!

உற்ற என்காதலி தெய்வமென்று
ஒவ்வொரு போதும் நினைத்திருந்து - தமிழே!
கற்ற உன்வித்தையாற் களிப்பதையக்
காட்டுந் திருநெறி கண்டேனடி!

15-09-1960

# உணர்வாரில்லை!

பருவப் பனிபெய்யப் பாவைய ருடலினில்
பாயும் குருதியும் ஓடவில்லை ! - தளிர்
கருகிடக் காய்ச்சும் கதிரவன் கொடுமையாற்
கால்களும் களைத்தே அசையவில்லை! - மேகம்
பெருகிடப் பேய்மழை கொட்டிப் புயல்வீசப்
பேதலித்தே சிந்தை யோடவில்லை! - மனம்
உருகிடப் பேதையர் உண்மைத் துயரிதை
உணர்ந்திடு வாரிங்கே ஒருவரில்லை!

கூடை சுமந்தே தலையிற் குழிவிழும்
கொடுமை யிலேவலி தாங்கவில்லை! - விரல்
ஓடை யிலேதளிர் கொய்யும் விரைப்பினில்
ஓடிடும் குருதியும் ஓயவில்லை! - படங்கை
மேலிடை இறுகவே கட்டியதா லுண்டி
மெல்லிய லுடலிற் தெரியவில்லை ! - அட்டை
தாடையிலே ரத்தம் உறிஞ்சிக் குடிக்கின்ற
தாங்கொணாத் தொல்லையும் தீரவில்லை!

பாலுக் கழுதிடும் பாலகர் கூக்குரல்
பாட்டாளி காதிலே ஓய்வதில்லை! - வெந்த
கூழும் குடித்திடக் குளித்துச் சுகம்பெறக்
குந்திட நேரமும் ஒழியவில்லை! - எந்த
நாளும் தவறாமல் தொழிற்களம் சென்றாலும்
நாழியேனும் துயர் ஓயவில்லை ! - வேலை
ஆளுடன் செல்லா தொருகணம் பிந்தினால்
அன்றைய தினத்திலே பேருமில்லை!

குடும்பம் பெருகினும் குடித்தனம் நடத்திடக்
கொடுத்த வீடின்றியே வேறுமில்லை! - தான்
தேடும் அறிவையோ சிறப்பித்து ஊக்கிடத்
தெளிவான தோர்பள்ளிப் படிப்புமில்லை! -
அங்கே
கூடும் குழவிகள் துள்ளித் திரிந்திடக்
கொள்ளைப் புறமேதும் அங்கேயில்லை! - பழக
நாடும் தொழிற் கல்வி யேதுமில்லை!
நம்மலை நாட்டார்க்கேனோ ? இந்த நிலை!

தினகரன் 07-03-1960

# காலம் வராதோ கும்மியடி!

தாயக மெங்கள் மலைக லென்றே
தரணியில் வாழ்த்திடக் கும்மியடி! - இங்கு
வாயசை யிட்டு வசைமொழி கூறுவோர்
வாயடைத்தே போகக் கும்மியடி!

மங்கள வாழ்த்தொலி யெங்கும் முழங்கிட
மலையக மெங்ஙனும் கும்மியடி! தமிழ்ப்
பொங்கல் விழாவினில் புத்தொளி பெற்றிடப்
பொங்கி யெழுந்தே கும்மியடி!

எங்கெங்கு வாழ்வோரு மிங்கு வந்தே மலை
எட்டியே பார்த்து வாயூறிடுவர்! - இது
எங்கள் மலைத்தாய் பெற்ற குழந்தைகள்
எடுத்த உழைப்பென்றே கும்மியடி!

சங்கம் வளர்த்த சான்றோர் வழியில்
சார்ந்தே வந்தோர் கும்மியடி! - பாற்
பொங்கலோ! பொங்கிட பூரித்து மகிழ்ந்து
பொல்லா வினைபோகக் கும்மியடி!

கலைவளம் பெருக்க கவிவள முறக்
கன்னியர் நீங்கள் பாடுங்கடி! - எங்கள்
மலையகம் காவியச் சோலையாய் மாறிடக்
காலம் வராதோ! கும்மியடி!

இலங்கை வானொலி
12-05-1962

# தமிழ்க்கொடி நாட்டுவோம் !

வாலிபத்தலை முழுது மொன்று கூடுவோம் ! - இங்கு
வாட்டி வதைக்கும் துயர் போக்க முனைவோம்!
போலித்தலை முழுதும் புவியிலகற்றுவோம்! - தமிழ்ப்
போற்றும் தலைவர்தமை யேற்றித் தொழுவோம்!

ஈழம்மலை முழுது மேறிச் செல்குவோம்! - எங்கள்
இன்பத் தமிழ்க் கொடியை நாட்டி வருவோம்!
ஆழக்கலை முழுதுங் கற்று வருவோம்! - கல்விச்
சாலைக ளெங்கும் கட்டிக் காத்துவருவோம் !

அந்நிய ரடிமைக் கிங்கு அடிபணியோம்! - தமிழ்
ஆட்சி நிலைப்படுத்தி யாண்டு வருவோம்!
கன்னியர் படுந்துயரைப் போக்கி விடுவோம்! - அவர்க்குக்
கல்வி யறிவமுது ஊட்டி வளர்ப்போம்!

கள்ளு சாராயக்குடி பானம் ஒழிப்போம்! - நன்கு
கற்றோர்கள் கூட்டமிங்கு வாழ்ந்திடச் செய்வோம்!
தில்லு முல்லுக் காரர்தமைத் தீரவொழிப்போம் ! - தீய
தீண்டாமைப் பேய்களை நாமோட்டி விடுவோம்!

போட்டி பொறாமைதனை யோட்டி யொழிப்போம்! - நல்ல
போர்வீரர் கூட்டத்தையும் வாழ்ந்திட வைப்போம்!
காட்டிக் கொடுக்கும் தீயர் கூட்ட மொழிப்போம்! - நல்ல
காவலர் கூட்டமிங்கு ஓங்கிடச் செய்வோம்!

காடுமலை திருத்திப் பயிர்செய்குவோம்! - நல்ல
கால விளைவுக்கே வழி சமைப்போம்!
தேடும்பொருளெவர்க்கும் சொந்த மாக்குவோம்! - மலைத்
தேனருவிபாயும் நாட்டைச் சொந்தமாக்குவோம்.

*சுதந்திரன் 17-06-1960*

# உபாயமே சொல்லுமம்மா!

நேர்மையு மில்லாமல்
    நீதியு மில்லாமல் - மலையகம்
    நிலையில் கலங்குதம்மா! - புத்திக்
கூர்மையு மில்லாமல்
    கொடுமையைத் தாங்காமல்
    கொடியாய்த் துவளுதம்மா! மலையகம் . . . .

பாசமு மில்லாமல்
    நேசமு மில்லாமல் - மலையகம்
    பதறித் துடிக்குதம்மா! - சொந்தத்
தேசமு மில்லாமல்
    தேடியுங் காணாமல்
    தேம்பி யழுகுதம்மா! மலையகம் . . . .

காவலு மில்லாமல்
    வேலியு மில்லாமல் - மலையகம்
    கவலையில் வாடுதம்மா! - உழைக்கும்
ஆவலு மில்லாமல்
    ஆவதும் புரியாமல்
    அலைந்து திரியுதம்மா! மலையகம் . . . .

பாவமுஞ் செய்யாமல்
    கோபமு மில்லாமல் - மலையகம்
    பண்பாய்ப் பழகுதம்மா! - துன்பச்
சாபம் விடுவதால்
    சாந்தியு மில்லாமல்
    சஞ்சலம் கொள்ளுதம்மா! - மலையகம் . . . .

போட்டியு மில்லாமல்
பொறுமையு மில்லாமல் - மலையகம்
பொதுவாய்த் திகழுதம்மா! - இந்த
நாட்டிலே நழுவாமல்
நாசமும் விளையாமல்
நாமகள் அருள்வாயம்மா! மலையகம் . . .

தீமையு மில்லாமல்
தீங்குமே செய்யாமல்! - மலையகம்
தெளிந்து திகழுதம்மா! - மக்கள்
ஓங்கி உயர்ந்திட
உண்மை தெளிந்திட
உபாயமே சொல்லுமம்மா! மலையகம் . . .

**பசுமலை வீனாஸ் கலாசாலை நாடகத்திற்காக**
06-03-1958

# அழகே தமிழ்!

சங்கம் வளர்த்த தமிழன்
தங்கக் குணத்தின் தரமோ பெரிது!
எங்கும் இன்பத் தமிழின் பெருமை
பொங்கும் அழகுப் புவனத்திற் பெரிது!

மன்னர்கள் மூவரும் மகிழ்ந்தே வாழ்த்திய
அன்னதோர் தமிழின் அழகே பெரிது!
இன்பத் தமிழின் இயற்பெருந் தீரம்
இப்பூ வுலகில் என்றும் பெரிது!

21-05-1960

# *சினந்து கொள்வதேன்?*

சிற்றெறும்புக் கூட்டங்களே!
சினந்து கொள்வதேன்? - மலைத்தாய்
பெற்றவர்கள் சுறுசுறுப்பில்
பெருமை கொள்வதால்!

கட்டவிழ்த்த காளைகளே!
துள்ளித் திரிவதேன்? - மலையில்
துட்டர்களே இல்லையென்ற
தூய சிந்தையால்!

பறவைகளே! சிறகடித்துப்
பாவிசைப்ப தேன்? - பச்சை
நிறமெங்கும் மேவியசீர்
நிம்மதி யாலே!

பால் கறக்கும் ஆவினங்காள்!
பயந்து விழிப்பதேன்? - குணம்
ஆல்பெருத்த விருட்சம்போல்
அமைதி யுற்றதால்!

எருதுகளே ! ஏங்கிநின்று
எனைப் பார்ப்பதேன்? - மக்கள்
பெருவுழைப்பின் பேரின்பப்
பெருமை கொள்வதால்!

கொக்கரக்கோ! . . . சேவல்களே!
கோபங் கொண்டதேன்? - மலை
மக்கள்முன்பே கண்விழித்து
மனை யிருப்பதால்!

கரியநிறக் காக்கைகளே!
கடுகி வந்ததேன்? - எங்கள்
அருங்குணத்தை மக்களிங்கு
ஆட்சி செய்வதால்!

துள்ளியோடும் புள்ளிமானே!
துயரங் கொள்வதேன்! - எங்கள்
நல்லிதய வாழ்வையிங்கு
நயந்து பெற்றதால்!

தோகைமயில் ஆடக்குயில்
தொடர்ந் திசைப்பதேன்? - கவித்தேன்
பாகைவழிந் தோடவிட்ட
பாச வுணர்வினால்!

கானகத்துச் செங்கவிகாள்!
களித் திருப்பதேன்? - செவ்
வானநிறக் கனிகளிங்கு
வர வழைப்பதால்!

மலைமகள் 07-04-1965

# இசை

அசைந்தாடும் யரவம் அசையாத கல்லும்
இசையால் மயங்கி யெழுந்தருளும் - இசைஞான
ஓசையாலே யுருளும் உலகத்தி லிசையின்ப
ஆசையிலா ருண்டோ சொல்?

பொருளைந்து மேயொடுங்கப் புவிமயங்கு மிசையாலே
அறியலா மெங்கள் ஆண்டவனைப் - புரிவாய் நீ
அறிவாலறிந்து அழகுதமி ழிசை வளர்க்கும்
நெறியாளர் மேலோங்கச் செய்.

இலங்கை வானொலி 12-03-1987

# விழித்தெழுவாய்

கொட்டுங்கடி! கும்மிக் கொட்டுங்கடி! - மார்
தட்டி விழித்தெழக் கொட்டுங்கடி! - ''லயப்''
பொட்டலிலே வந்து கூடுங்கடி ! - மலை
முட்டி விழித்தெழக் கொட்டுங்கடி! கொட்டு . .

காடு மலை யேறிப் பாடுபட்டோம்! - சொந்த
வீடு நமக்கில்லை கூறுங்கடி ! - செக்கு
மாடுபோ லிங்குநாம் பாடுபட்டோம்! - இனி
நாடுங்கடி நல்ல வீடுத்தேடி! கொட்டு . . . .

ஆண்டாண்டு காலமாய் நாமிருந்தோம்! - இங்கு
ஆண்டி நிலையோதான் கூறுங்கடி! - உயிர்
மாண்டு மடிந்தாலும் கூடி நின்று ! - நமக்கு
வேண்டும் உரிமையைக் கேளுங்கடி! கொட்டு . .

கஞ்சி குடிக்கவே நாமுழைத்தோம்! - ஏன்?
அஞ்சி வாழ வேண்டும் சொல்லுங்கடி! - மலை (த்)
தஞ்ச மென்றே நாம் இங்கு வந்தோம்! - இனித்
துஞ்சினும் போகாதே கும்மியடி! கொட்டு . . .

நல்ல கலைகள் பெருகவேண்டும்! - துயர்
மெல்லக் கலைந்திட வேண்டுமடி! நம்
செல்வக் குழந்தைகள் கற்க வேண்டும்! - பள்ளி
செல்ல வழிதேடிக் கும்மியடி! கொட்டு . . .

நாட்டுக்குச் சேவையே செய்யவேண்டும் ! - கல்வி
நாட்டமே நாம்தினம் கொள்ளவேண்டும்! - இங்கு
பாட்டுக்குப் பாட்டுப் பொருள்தேடி! - நன்றாய்ப்
பாடுங்கடி கும்மிக் கொட்டுங்கடி! கொட்டு . . .

வீரகேசரி 08-04-1962

# பழைமையும் புதுமையும்

விதையினிலே வளர்ந்த தேயிலைச் செடிகள்
வேரோடு சாய்ந்தனவே! -மலையில்
தூரோடு மாய்ந்தனவே! - அவற்றின்
கதையினில் வளர்ந்து கிழடுகள் ஆனவர்
காலங்கள் ஒய்ந்தனவே! -வாழ்வுக்
கோலங்கள் தேய்ந்தனவே!

செப்பனிடப் பட்ட மலையினிலே புதுக்
கன்றுகள் வளர்ந்தனவே! - செழிப்பில்
நன்றவை படர்ந்தனவே! - பழைய
குப்பனவன் பெற்ற குழந்தைகள் இப்போது
குணத்தால் உயர்ந்தனவே! - நல்ல
மனத்தால் சிறந்தனவே!

புத்தம்புது முறைச் செடிகளோ நெருங்கிய
பொலிவில் உயர்ந்தனவே! - பசுமை
எழிலில் திகழ்ந்தனவே! - மலையில்
நித்தம்புது வழிச் சிந்தனை பெற்றெழும்
சிறுசுகள் பிறந்தனவே! - மனச்
சிறுமைகள் தீய்ந்தனவே!

விழிகளுக் கினியநல் விருந்தினை நல்கிய
விளைபயிர் நிரைவழியே - நெருங்கிக்
கிளைகளைப் பரப்பினவே! - இந்த
விதியினில் அறிவெனும் விளைபயிர் வளர்ந்த
விருப்பினில் உயர்ந்தனரே! - நல்ல
பொறுப்பினில் மலர்ந்தனரே!

பயிர்கள் உயர்ந்திடும் மலையினில் எழில்வளம்
பாரில் சிறந்ததுவே! - நாமும்
நேரில் அறிந்ததுவே! - வாழும்
உயிர்கள் மலையினில் ஒற்றுமை யோங்கிட
உணர்வில் எழுந்தனரே! - புதுமை
உலகில் புகுந்தனரே!

சிந்தாமணி 27-07-1986

# தளிர்கள்

வெடிக்கும் அரும்பினில் துளிர்க்கும் இளந்தளிர்
விரிந்திடும் ஆயிரம் ஆயிரமாய்! - துயர்
இடிக்கும் உணர்வினில் தளிர்க்கும் நினைவுகள்
இதயத்தில் ஆயிரம் ஆயிரமாம்!

தளிர்களைத் தாங்கிடும் கூடையில் பெருகிடும்
தலைச்சுமை ஆயிரம் ஆயிரமாம்! - மலை
ஒளிர்ந்தெழ ஓங்கிய உணர்வலை தாங்கிடும்
உளச்சுமை ஆயிரம் ஆயிரமாம்!

கொட்டிய தளிர்களோ குவிந்தபின் வதங்கிய
கோலத்தில் ஆயிரம் ஆயிரமாம்! - ஆவல்
முட்டிய தாலுளம் கொட்டிய நினைவுகள்
முகையவி ழாமலே ஆயிரமாம்!

வதங்கிய தளிர்களை வாங்கிய யந்திரம்
வதைப்பதும் ஆயிரம் ஆயிரமாம்! - உளம்
கலங்கிய நிலையினில் கசங்கிய நினைவுகள்
கழிவதும் ஆயிரம் ஆயிரமாம்!

உருவினில் மாறியே உலர்ந்திடும் தளிர்கள்
உருள்வதும் ஆயிரம் ஆயிரமாம்! - மனக்
கருவினில் வளர்ந்திடும் கலையொளிர் நினைவுகள்
கருகிடல் ஆயிரம் ஆயிரமாம்!

பசுந்தளிர் மாறிடப் பானமாய்ப் பருகுவோர்
பாரினில் ஆயிரம் ஆயிரமாம்! - மலைப்
பசுந்தளிர்ப் பாலர்தம் நினைவுகள் ஓங்கிடப்
பாதைகள் ஆயிரம் ஆயிரமாம்!

சிந்தாமணி 17-07-1986

# உயர்ந்த வாழ்வைத் தேடு!

செக்கு மாடு போல் உழைத்தோம்
''செக்கு ரோலில்'' பேரில்லை! - ''கண்டக்டர்''
மக்கு போல் நிற்குறாரு
மாதச் சம்பளம் முன்னூறும்! - ''ஓவர்டைம்''
மாதக் கணக்கு இருநூறும்!

கானு வெட்டிக் களைத்து வந்தோம்
''காம்ப ராவு''ம் இல்லையாம் ! - ''கணக்கன்''
கால் ஏக்கர் பங்களாவில்
காலை நீட்டித் தூங்குறான்! - மகனும்
''காம்ப ரா'' வை எண்ணுறான்

புல்லு வளர்ந்து லயத்தைச் சுற்றிப்
புழுவும் மொய்க் குதே! - ''கிளார்க்கர்''
பூந்தோட்டம் போட்டு வைத்துப்
பூவும் விற்குறார் - விலைக்குப்
பூத் தேனும் விற்குறார்!

அரைப் படிப்புப் படிக்க வைத்து
ஆளுசேர்க் குறான்! - வேலைக்கு
ஆளுசேர்க் குறான்! - படிக்கத்
துரை மகன் லண்டன் போயும்
துள்ளிக் குதிக்கிறான்! - அங்கே
தூங்கி விழுகிறான்!

உழைக்க வந்த உண்மைத் தம்பி
உணர்ந்து பார்க்கணும்! - நீயும்
உணர்ந்து பார்க்கணும்! - அறிவால்
உலகத்தை யே ஆட்சி செய்ய
உயர்ந்து வாழணும் - தமிழா!
உயர்ந்து வாழணும்!

பசுமலை வீனாஸ் கலாசாலை
நாடகத்திற்காக 06-07-1960

# கோழைத்தனம் ஏனடா?

குட்டக் குட்டக் குனிந்து போகும்
கோழைத் தனம் ஏனடா? - நீ
பட்ட பாடு போதும் இனி
பாதை வேறு தேடடா!

வெட்ட வெட்டத் தழைத்து வரும்
விதிமுறை யேன் கூறடா! - நீ
கெட்ட கேடு போதும் இனி
கீழ்மைக் குணம் தீரடா!

தட்டித் தட்டி யணைத்து உன்னைத்
தாள மாக்கும் பேரடா! - வா
பட்டி தொட்டி யெங்கும் உன்னைப்
பழிப்பதை நீ பாரடா !

மட்டி மட்டி யென்று சொல்லி
மடையராக்கும் பேரடா! - நீ
தட்டிக் கேட்க அஞ்சு கின்றாய்
தரணி வாழ்வு ஏதடா?

திட்டித் திட்டித் தினமும் உன்னைத்
தீய்க்கும் தீயர் உண்டடா! - குருதி
கொட்டித் தினம் உழைக்கும் வாழ்விற்
கொடுமை யேனோ கூறடா?

குட்டிக் குட்டிக் குனிய வைக்கும்
கொடிய குணம் போக்கடா! - யான்
தட்டிக் கேட்கக் கிட்டி நிற்பேன்
தலை நிமிர்ந்து நில்லடா!

வட்டத் துள்ளே சுற்றிச் சுற்றி
வாடும் வாழ்க்கை ஏனடா? - நல்ல
திட்டந் தீட்டித் தெளிந்த வாழ்வைத்
தேடி டாத தேனடா?

ஒட்டி யொட்டி உன்னைத் தினம்
உறிஞ்சு கின்றார் பாரடா! - பணப்
பெட்டி தினம் குட்டி போட்டுப்
பெருகு தங்கே கேளடா!

## சந்தேகம்!

சந்தேகம்! அது சந்தேகம்!
சஞ்சலம் உண்டாகும் சந்தேகம்!
சந்தேகம்! அது சந்தேகம்!
சங்கடம் உண்டாகும் சந்தேகம்!

சந்தேகம் என்பது வந்தாலே
சந்தோஷம் என்பது போய்விடுமே!
சந்தேகம் என்னும் சொல்லாலே
சகத்தினில் துன்பம் வந்திடுமே!

சந்தேகம் உன்னிடம் குடியிருந்தால்
சடுதியில் தூக்கி தூக்கி எரிந்துவிடு!
சந்தேகம் வந்தால் உடனே நீ
சந்தோசமாகவே தீர்த்துவிடு!

06-03-1983

# ஏக்கம் !

முந்திரி வற்றல் முகத்திடையே குழி
மூடி மறைக்கின்ற கண்களுமாய்ப் - படியில்
குந்திக் கொதுப்பிலே வெற்றிலை சப்பிக்
குதப்பிய கொவ்வைச் செவ்வாயிதழாள்! - முற்றிப்
பிந்திப் பழுத்த நரைமயிர் வாரியே
பின்னே முடித்த குடுமியுடன் - ஒருநாள்
அந்திப் பொழுதினில் சிந்துங் கண்ணீருடன்
அமைதி யிழந்தனள் பேராத்தாள்!

பெற்று வளர்த்தநன் நால்வருள்ளே யின்று
பெண்க ளுடன்ஆ ணொன்று மிச்சம்! - அதில்
கற்றுத் தெளிந்ததோ ஒன்றுமில்லை! - தந்தை
காலனின் கையிலே சிக்குண்டதால்! - இனி
முற்றும் குடும்பச் சுமையேற்ற தாயவள்
முந்தி யிருந்தவர்க்கும் மணம் முடித்தாள்! - மிகப்
பற்று டையாள் கடைக் குட்டி யவளுக்கும்
பரிசம் போடும் நன்னாள் பார்த்திருந்தாள்!

அத்தை மகனுக்குத் தப்பாமல் கட்டிட
அக்கரை சென்றனள் பேராத்தாள்! - அங்கு
மெத்தச் சுபமாக மங்கள காரியம்
மேம்படச் செய்து முடித்தனளே! - பின்
இத்தரை ஈழப் பித்துடை மூத்தவன்
இருப்பிடம் சென்றுதம் வாழ்நாளை - ஒரு
பத்து நா ளேனும் மகிழ்வுடன் போக்கிடப்
பார்த் தறியார் இந்த ஊரிலுள்ளோர்!

அக்கரை போய்மகள் பார்வதியைக் காண
ஆவலுற்ற நாட்கழிந்த பின்னும் - மூத்த
மக்களிரு வரையிங்கு விட்டேயங்கு
மறந்துபோய் வாழ்வதை எண்ணினல்லள் - தினம்
துக்கந் துயரத்தால் துரும்பாய் இளைத்தே
தொண்ணூறு ஆண்டுகள் கழிந்து பின்னே! - வீண்
சக்கை யுடம் போடு அக்கரை சென்றுதாம்
சாவதிலும் ஓர்பயனு மில்லை !

ஆழ்கடல் தாண்டிப் போய் அன்புமகளையும்
ஆதரிப்பா ரில்லை என்றொரு ஏக்கம் ! - இங்கு
வாழ்வதற் கோவழித் துணை யொன்றில்லாது
வாடிய வாதையினா லொரு ஏக்கம் ! - மண்ணில்
வீழ்வது திண்ணம் வேண்டிய தொன்றில்லை !
வெறேந்த ஏக்கமோ யானறியேன்! - சற்று
ஆழ்ந்ததோர் சிந்தனை கொண்டனள் காலனை
ஆதரித் தவ்வழி சென்றனளே !

## *பாலின் பயன் !*

பாவியுன் பணமெல்லாம்
பாதாளம் மட்டுமே ! - என்
பாவின் பொருளெல்லாம்
பரலோகம் சேருமே ! - என்
ஆவியோ பிரிந்தபோது
ஆவதென்ன அப்பணத்தால்? - என்
சாவிலே மணக்கும்புகழ்ப்
பாலின் பயனறிவாய் !

# மட்டம் சரியாப்போடு மாரியாயி!

மட்டம் சரியாப் போடு மாரியாயி! - தேயிலை
மாரெடுத்துக் கீழே போடு மருதாயி!
சட்டப் படிவேலை செய்யும் மூக்காயி ! மலைக்குச்
சங்கூது முன்னம் வாடி மூக்காயி!

முத்தலை காம்பு வேணாம் முத்தம்மா! - நல்ல
மூனெலைக் கொழுந்தை எடு பொன்னம்மா!
செத்தை எடுத்துப் போடு செல்லம்மா! - வங்கியைச்
சேர்த்து எடுக்காதே கண்ணம்மா!

அரும்பை எடுக்காதே அரசாயி! - கெதியா
ஆளோடு சேர்ந்து எடு ஆராயி!
முருங்கை வாதொடித்துப் போடு முத்தம்மா! - காது
மூட்டுப் பிடுங் கெடுக்காதே மூக்காயி!

பக்க வாதை யொடிக்காதே பாப்பாத்தி! - கணக்கன்
பார்த்து விட்டா வெரட்டுவாரு பாப்பாதத்!
முக்காடு போடாதே கருப்பாயி! - சும்மா
முணு முணுத்துப் பேசாதே செல்லாயி!

மடிகட்டி எடுக்காதே செலம்பாயி! விரல்
மடித்துக் கொழுந்தை எடுமீனாட்சி!
தடிபோட்டு மட்டம்போடு தங்காயி! - கூடையைத்
தலையிலே போட்டு எடு பெருமாயி!

07-06-1960

# சங்கே முழங்கு!

மலைத்தாயே! மலைக்காதே! மலையிலெங்கும்
மறத்தமிழ் வீரத்தின் உணர்ச்சி பொங்கச்
சலைக்காமல் சாவரினும் நீதிக்காகச்
சமரிடச் செல்லென்று ஊதுசங்கே!

உழைப்புக்கே யுன்வாழ்வை யர்ப்பணிக்கும்
உத்தமத் தாயேநீ உயர்ந்தெழவே
அழைக்கின்றேன் அன்போடு அவசரமாய்
அஞ்சாதே வாவென்று ஊதுசங்கே!

அறிவென்னும் ஒளியிழந்து நிற்குமெங்கள்
அருஞ்செல்வக் குழந்தைகளே! அகிலம் போற்ற
அறிவுக்கண் திறந்தெங்கும் ஒளிபெறவே
அனைவருந் திரண்டுவர ஊதுசங்கே!

இளைய என்மலையகமே விழித்தெழுந்து
எத்தர்களின் ஏமாற்று வித்தையெல்லாம்
களைந் தெறிந்து கலைகளெல்லாம் கற்றறியக்
களிப்புடனே வாவென்று ஊதுசங்கே!

அறியாமைப் பேய்களைநீ விரட்டிவிடு
அடிமைத் தளையறுத்து வெற்றி பெறு
நெறியாக நின்வாழ்வை நிமிர்ந்திடவே
நேர்வழி செல்லென்று ஊதுசங்கே!

உன்னுழைப்பை ஊறுஞ்சுகின்ற அட்டைகளாய்
உனக்குள்ளே இருக்கின்ற வஞ்சகரை
உன்னறிவுத் தீயாலே பொசுக்கிவிட
உறுதியாய் நில்லென்று ஊதுசங்கே!

அடக்கி யொடுக்கியுன் வாழ்வையிங்கு
அதிகாரக் கும்பலுக்கு விற்காதேநீ!
மடக்கி யுன்வாழ்வைநீ சுருட்டி வைத்து
மதிமயங்கா தேயென்று ஊதுசங்கே!

வாலாட்டும் வன்செயல்கள் மலையை நோக்கி
வந்தாலோ விரட்டியடி நேரேநின்று !
போராட்ட வாழ்வை இப் புவியிலோட்டிப்
பொன்னான வாழ்வுபெற ஊதுசங்கே!

ஊதாரித் தனமாகச் செலவழித்து
உன்வாழ்வை மலடாக்கி வருந்தாதேநீ !
தோதாகச் செலவிட்டுச் சுகமாய்வாழச்
சொல்லிநீ மலையெங்கும் ஊதுசங்கே!

அடித்தளத்தில் போட்டுன்னை மிதிக்குந்தீய
அரக்கர்களை அழித்திட நீ வாராயிங்கே!
படித்தறிந்த மேதைகளாய் உயர்ந்தெழுந்தே
பார்புகழ் வாவென்று ஊதுசங்கே !

## புகார்

பொல்லாதார் புகழ்மனையில் நல்லார் புகார் !
பொய்யர்தம் புகழரங்கில் புலவோர் புகார் !
வல்லோர்கள் வாய்மையிலா வழக்கில் புகார் !
நல்லோர்நல் வழிதனிலே பொல்லார் புகார் !

நேர்மையிலா நெஞ்சத்தில் நல்லோர் புகார் !
நேர்மையுளோர் அஞ்சியே வஞ்சம் புகார் !
மானமிக்கோர் மண்டியிட்டுத் தஞ்சம் புகார் !
தானமிடார் தக்கோரின் நெஞ்சில் புகார் !

வீரமிலார் வெற்றியைத் தேடிப் புகார் !
ஈரமிலார் நெஞ்சத்தில் ஏழை புகார் !
அன்பிலார் நெஞ்சத்தில் அறிஞர் புகார் !
அறிஞர்கள் அறிவிலார் அவையில் புகார் !

13-03-1984

# யாருக்குச் சொந்தம் ?

கார்வண்ணத் தன்மேனி கலங்கி நித்தம்
கடு கதியிற் செல்லுகின்றாய் என்ன கோபம்?
தார்ப் பாதை உருகி நித்தம் ஓடுதிங்கே
தயை கூர்ந்து மழைபொழிய மறுத்து நீயும்
ஊர் விட்டுப் போகும் மாயம் யானறியேன்!
உண்மையதைச் சொல்லி விட்டுச்செல்லாயோநீ!
யார் உன்னைத் தூற்றியது என்னிடத்தில்
யாவையும் சொல்லாயோ? மேகத்தாயே!

நாடு கடத்துவதால் நடு நடுங்கித் தனித்து
நான் போ வேனென் றெண்ணி உறவினர்க்கு
வீடுதொறும் வீதிதொறும் சொல்வதற்கோ
விடியுமுன் நீ போக எத்தனித்தாய்? பெருங்
காடுமலை திருத்தியபின் வீடுகட்டிச் செல்வம்
கரைபுரண் டோடுமட்டும் உழைத்து விட்டு
நாடு உயர வழி செய்த நாட்டை விட்டு
நான் போகேன் ஓரணுவும் அசையமாட்டேன்!

உரிமைகள் பலமறுத்து ஊரில்பல பேசியிங்கு
உபத்திரவம் செய்வதையும் எண்ணி நொந்து
பெரியசுமை மனதேற்றுப் பேதளித்த கொடுமையா
பேசாமல் போகவும் நீ எண்ணினையோ? பேதையர்
அறியவில்லைஇங்குள்ளோர் அரியபண்பைத் தானும்
அதைமீறிக் கட்டளைக்கு அடிபணிந்து நடுங்கி
யாரிங்கே போவதற்கு உள்ளோர் ? இல்லை !
யாருக்குச் சொந்தமிது ? அசைய மாட்டேன் !

சுதந்திரன் 19-11-1966

# பாகுபாடு ஏன்?

ஏட்டுரிமை எமக்கெதற்கு?
இந்த மண்ணிலே! - எமக்கு
நாட்டுரிமை வேண்டுமடா?
சொந்த மண்ணிலே! - நமக்கு

வேட்டு வைக்கும் ஓட்டுரிமை
விந்தை ஏனடா? - என்றும்
மோட்டுத்தனம் காட்டுகின்ற
மோகம் ஏனடா? - எங்கும்

பாட்டிசைக்கும் பறவைகளைப்
பார்த்துக் கேளடா ! - அவைக்கு
நாட்டுரிமை தந்தவன் யார்?
நானிலத்திலே ! - விலங்கு

காட்டினிலே வாழ்வதற்குக்
கவலை ஏதடா? - வெறும்
ஏட்டுரிமை கேட்டவைகள்
இழிவு கொண்டதோ? - இந்த

நாட்டுவளம் பேணுகின்ற
நமக்கு மட்டுமேன்? - உரிமைப்
பாட்டினிலே காட்டுகின்ற
பாகுபாடும் ஏன்? - நாங்கள்

கேட்டுக்கேட்டுப் புளித்ததடா!
கேடு கெட்ட தேன் ? - இனித்
தீட்டுத்தீட்டு அறிவினாலே
தேடிக் கொள்ளடா!

# பொங்கலுக்கு வாங்க மச்சான்

அத்தை மகனே! எனது
ஆசை யுள்ள மச்சானே!
அத்தை மகள் பிறந்தால்
அடுத்து வழி பிறக்காதோ?

காணி நிலம் இல்லையென்றும்
கல்யாணம் ஏதுக் கென்றும்
வீடுமனை இல்லை யென்றும்
வேண்டாமே வாழ்வு என்றும்

போன மச்சான் இன்று வரை
போடவில்லை மடல் எனக்கு!
ஆன தெல்லாம் ஆகுமென
ஆளுங்கட்சி வாக்குறுதி

காற்றோடு பறக்கு மென்ற
கவலை விடு மச்சானே!
நேற்றோடு மறைந்த கதை
நீண்டு இனிப் போகாது

புத்தம் புது வீடு கட்டும்
புதுப் பேச்சு அடி படுது
சித்தம் கலங்காமல் மச்சான்
சீக்கிரமா வந்திடுங்க!

பொங்கல் சீர் வரிசையது
பொன்னம்மா கொண்டு போறா
எங்களுக்கும் இல்லையென
ஏங்காதே மச்சானே!

பச்சரிசி சர்க்கரையும்
பயறும் விலை ஏறுதென்று
பச்சையம்மா வெள்ளரிசிப்
பால் பொங்கல் பொங்குகிறா !

தோட்டத்து லயமெங்கும்
தோரணங்கள் தொங்குதெங்கே
மாட்டுக்கும் பொங்கல் வைத்து
மச்சானே வந்திடுங்க!

வீரகேசரி 28-12-1994

# பாடையிலே என்னுடல் போகும் வரை . . . .

குறிஞ்சித் தாயே! குறிஞ்சித் தாயே! - உன்
குலமகனின் கதை அறியாயோ?
தெரிந்தும் தெரியா திருந்தாயோ? - அறியேன்
தெரிந்து கொள்ளிப்போ என்தாயே!

எத்தனை யெத்தனை துண்டுகளாய் - என்
இன்னுயிர் உடலம் மூச்செல்லாம்
உத்தமி யுந்தன் வாழ்வுக்காய் - யான்
உனக்கே யர்ப்பணம் செய்தேனே!

கைகள் எழுதி ஒய்ந்ததில்லை! - என்
கற்பனை வளமும் காயவில்லை!
மைவிழி இரண்டும் மூடவில்லை! - உன்
மடிமீ திருந்து பாடுகின்றேன்!

சிறு நீ ரகமோ செயலிழந்து - என்
சிறுவுடல் மெலிந்து தோலானேன்!
மறுபிறப் பெடுத்தே என்தாயை - யான்
மறவாமல் இங்கு பாடவந்துள்ளேன் !

அலைகடல் தாண்டி அக்கரைபோய்-நான்
அறுவைச் சிகிச்சை யில்லாமல்
மலைத்தாய் அன்புக் கருணையினால்-இந்த
மலைமகன் சேயகம் வந்துள்ளேன்!

பாடையில் என்னுடல் போகும்வரை ! - கவி
பாடுதல் எனக்கே வேலையம்மா!
ஓடைகள் சலசலத்து ஓடும்வரை - மலையில்
ஓயாதென் பாடலும் ஒலிக்குமம்மா!

வீரகேசரி 03.08.1997

# நமது கவிஞரைப் பற்றி...

மலையகக்கவிஞரும் மக்கள் கவிஞருமான க.ப.லிங்கதாசன் அவர்கள் அமரராகி இரண்டு வருடங்கள் ஓடிவிட்ட இந்நிலையிலும், அவர் மறைந்து விட்டதாக எங்களால் இன்னும் உணரமுடியவில்லை. எங்களோடும் வாசகர்களாகிய உங்களோடும் இலக்கியச் சோலையில் இன்னும் உலாவிக்கொண்டுதான் இருக்கிறார்.

தலாத்துஓயாவைச் சேர்ந்த மொறக்கொல்லை தோட்டத்தில் பிறந்து, வளர்ந்து அதே தோட்டத்துப் பள்ளியில் ஆரம்பக் கல்வியை கற்றுப் பின்னர், தலாத்துஓயா அரசினர் மத்தியக் கல்லூரியில் உயர்தர வகுப்புவரை கல்விகற்று தேர்ந்தார். பின்னர் 1960-1969 வரை பசுமலை **"வீனாஸ் கலாசாலை"** எனும் பெயரில பாடசாலையைத் தோற்றுவித்து நிர்வகித்தும் 1971இல் கலஹா இந்து இளைஞர் மன்றத்தை உருவாக்கி மன்றப்பாடசாலையை நிர்வகித்தும், இரும்புக்கொல்லை தோட்டப் பாடசாலையில் சில ஆண்டுகள் ஆசிரியராக கடமையாற்றியும் சிறந்த கல்விப் பணிகளைச் செய்து மாணவர்களின் எழுச்சிக்காக வித்திட்டார்.

தனது வாழ்க்கைத் தொழிலாக வணிகத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டு அத்துறையில் பல்வேறு தொழில் நுட்பங்களையும் நிர்வாகத் திறமைகளையும் அறிந்திருந்தார். சமூக நலனையே தனது குறிக்கோளாகக் கொண்டு ஆக்கங்களைக் படைத்துவந்த புரட்சிக் கவிஞர் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக எழுத்துத் துறைக்கு தம்மை அர்பணித்துக் கொண்டார். பழைமைகளைச் சாடிப் புதுமையை நாடித் தனது எழுத்தாற்றலால் புத்துலகொன்றைப் படைக்க எண்ணித் துணிவுடன் கடைசிவரை எழுதிவந்து மலையக எழுத்துலகில் பிரபலம் பெற்றார்.

கவிதை, சிறுகதை, சிறுவர்க்கதை, உருவகக்கதை, குட்டிக்கதை, சிறுவர்ப்பாடல்கள், ஆய்வுக்கட்டுரை, விமர்சனம், குறுநாவல், நாடகம், மேடைக்கவியரங்கம், வானொலிக்கவியரங்கம், மெல்லிசைப்பாடல் போன்ற பல்வேறுத்துறைகளிலும் தனது முத்திரையைப் பதித்துக் கொண்டார்.

பிரதேச மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பல பாராட்டுக்களையும், விருதுகளையும் பெற்ற இவர் தேசிய மட்டத்தில் **"தமிழ்மணி"** பட்டத்தைப் பெற்று கௌரவிக்கப் பட்டுள்ளார்.

இவரின் அன்பு உள்ளத்தில் சிறகடித்துப் பறந்த குயில் **"குழந்தைக்குயில்"** இக்குழந்தைக்குயில் சிறுவர் பாடல்களின் முதலாம் பகுதி 1985ஆம் ஆண்டு டிசெம்பரில் நூலுருவில் வெளிவந்தது. **"குறள் கூறும் மலையகம்"** எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் 1965இல் வெளிவந்தது.

கவிஞரின் கனவுகள் நனவாகட்டும்! அவரின் அறிவு நூல்கள் பல மலரட்டும்! மலையக இலக்கியச்சோலைக்குள் அவை என்றும் மனந்தரும் மலர்களாக மிளிரட்டும். இந்த "குறிஞ்சித்தேன்" கவிதைத் தொகுப்பு வாசகர்களுக்கு மலைத்தேனாக இனிக்கட்டும்.

**- ப.பகீரதன் -**